தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்

நோய்களுக்குச் சித்தபரிகாரம்

(இரண்டாம் பாகம்)

ஆசிரியர்

மரு. சண்முகவேலன், எச்.பி.ஐ.எம்.,

பதிப்பாசிரியர்

மரு. அ. சுந்தரராசன். பி.ஐ.எம்.,

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம்

சென்னை-106.

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

[இரண்டாம் பாகம்]

டாக்டர் ம. சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் பேராசிரியர்.
அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இயக்ககம்
சென்னை - 600 106,

1993

முதற் பதிப்பு 1976

இரண்டாம் பதிப்பு 1993

Central Library ... Indian Medicine & ...

21 AUG 199[illegible]

5754

அச்சிட்டோர் :

அரசு கிளை அச்சகம்,

புதுக்கோட்டை,

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ.,

அவர்கள் அளித்த

அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன் மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்துவிடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும். கற்றறிந்தும்—கையாளப்பட்டுவரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும் இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவமுறைகளுள் சித்த மருத்துவமும் இடம்பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும். அந்நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும் ஒரு காலத்திலே அச்சேறியும் இன்று கிடைத்ததற்கரிதாகியும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள் உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால் தான் இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும், மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிட்டாதவிடத்து மாற்று மூலப் பொருள்களைக்

கொண்டு மருந்து செய்திடவும் மருந்து உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடுகொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டுமென்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்—அதன் முன்னாள் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன் வந்தவுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக்குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு.மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் 34-வது நூலாகும்.

இந்நூலின் பதிப்பாசிரியர்— சித்த மருத்துவ வல்லுநர் டாக்டர் ம. சண்முகவேலு, எச்.பி ஐ.எம்.—அவர்கள்-இளமை முதலே—தமது முன்னோர் தம் மருத்துவக் கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப்

பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச்செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் – இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு— ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லுநரில் அவர் தலைசிறந்தவராவார் என்னில் மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும், பொறுப்புடனும், எளிய இனிய தமிழில்— பல நூல்களை இயற்றியமைக்கும் சித்த மருத்துவ உலகம் டாக்டர் ம. சண்முகவேலு, எல்.ஐ.எம்., எச்.பி.ஐ.எம். அவர்களுக்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

மிகக் கொடிய நோய்களையும் அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:—

''அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனால் நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும், அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டுமென்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு இவ்வரிய நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ள அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவ்வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகுமென நம்புகிறேன். அவர்கள் தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை,
23—10—1975.

க. அன்பழகன்.

முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும், மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவமுறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நில நடுக்கம், கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளி நாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும், பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக் கலையைத் தொன்று தொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருந்து செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருந்தும் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவுகொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று,

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் . நீதிக் கட்சிச் சார்பில் முதலமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924–இல் இந்திய மருத்துவப்பள்ளியைத் தோற்று வித்தும் பல கிராம மருத்துவமனைகளை அமைத்தும் இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு மலர்ச்சிக்கு வித்தூன்றினார். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப்புத்த கங்களும், முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாடப்புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி, காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தம் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும் குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினார். அக்குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும், அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணப்பாடம்—மூலிகை—வகுப்பு, தாதுசீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக்கல்லூரி நடந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட, பாட நூல் களும், துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும், கையேடுகளையும் ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopoea committee G.O. Ms. No. 2163, dt. 23—8—60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G.O. Ms. No. 1060, Health, dt. 13-6-66) ஒரு குழுவும் திருவருட்பா, திருப்புகழ் முதலியவை களில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு மூன்று குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக நோய் நாடல், நோய் முதனாடல் திரட்டு (1967) அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளி வந்தன.

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற் கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து, சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும் ஒரு குழுவைத் G.O.Ms. No. 2571 of 23—10—73-ல் தோற்றுவித்தார்கள். அக்குழுவின் பணிக ளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்து பாது காத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி தட்டெழுத்து படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல், ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும், 100 கையெழுத்துப் பிரதி களையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித் துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத் துறை இயக்குநர் தம் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவருக்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளார். அவர்கள் நூல்களைப் படியெடுத்து திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாயைக்கொண்டு மேற் படி நூல்களை நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிரு வாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் நூலாக "இந்த நோய்களுக்குச் சித்த பரிகாரம்" வெளியாகிறது.

மேற்கண்ட அரிய நூலின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும்பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்ததோடு மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்ததமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும் காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறு மலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழி முறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்கு தடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிறவசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்து வரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் உயர்திரு. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில் அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய இராமநாதபுரம், சரசுவதி அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங்கண்டு முனியாது நனி யாதரவுதந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூலை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு.

இந்திய மருத்துவத் துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600 029.

முகவுரை

நோய்களுக்குச் சித்தப் பரிகாரம் முதற்பாகம் முகவுரையில் நூலாசிரியர் இந்நூல் எழுத நேரிட்ட காரணங்களையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கி கூறியுள்ளார். பேரறிஞர் உயர்திரு ஜி. டி. நாயுடு அவர்கள் காலஞ்சென்ற பின் இரண்டாம் பாகமாகிய நோய்களுக்குச் சித்த பரிகாரம் என்னும் இந்நூலை அச்சடிக்க யாரும் முன்வரவில்லை. ஆதலால் நல்வாழ்வுத்துறை அமைச்சர் உயர்திரு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், இந்திய மருத்துவத்துறை இயக்குநர் உயர்திரு டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம். அவர்களும் ஆலோசனை செய்து இந்நூலின் ஒரு பகுதியை அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து வெளியிடும் பல நூல்களோடு இதனையும் பதிப்பிக்கலாமென்ற ஆலோசனையை திருக்கோயில் நூல் வெளியீட்டுக் குழு தலைவர் உயர்திரு டாக்டர் இரா. தியாகராசன் L. I.M. அவர்களிடம் கூறி அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்த அமைச்சர் பெருமகனார் அவர்களுக்கும், இயக்குநர் அவர்களுக்கும் இந்நூல் வெளியிடுவதற்கு ஏகமனதாக அங்கீகாரம் கொடுத்த சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவினர்களுக்கும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு தலைவர் அவர்களுக்கும், குழுவினர்களுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் எஞ்சிய பகுதி மூன்றாம் பாகமாக விரைவில் அச்சிட்டு வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ம. சண்முகவேலு, எச். பி. ஐ. எம்.,
(முன்னாள் பேராசிரியர்)
இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பொருளடக்கம்.

முதற் பாகத்தின் தொடர்பு அத்தியாயம்	நோய் விவரம்.	பக்கம்
எண்.		
32	சிறுநீர் நோய்ப் பிரிவுகள் கல்லடைப்பு—சதையடைப்பு நோய்களுக்குப் பரிகாரம்.	1-45
33	நீர்ச்சுருக்கு (நீர்க்கடுப்பு-மூத்திரக்கிரிச்சரம்)	45-53
34	நீர்க்கட்டு (நீரடங்கல்)	53-62
35	சொட்டுநீர்	62-68
36	வெள்ளை நோய்	68-91
37	நீரடைப்பு நோய்	92-98
38	மேகநீர் (இருபது குறிப்பு)	98-99
39	நீரிழிவு நோய் (மதுமேகம்)	99-149
40	தெளிநீர்	149-155
41	வெண்ணீர் நீர்	155-166

அத்தியாயம் 32

சிறுநீர் நோய்

பரிகாரம்

சித்த மருத்துவம் இதனை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

1. நீர் அருகல் நோய்கள்:—இதில் கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, சொட்டுநீர், வெள்ளை, நீரடைப்பு என ஆறு வகைகள் கூறப்பட்டுள்ளன.

2. நீர் பெருக்கல் நோய்கள்:—இதில் மேக நீர் இருபது பற்றி விளக்கியுள்ளார்.

3. மேற்கூறிய இரு பெரும் பிரிவுகள் நீங்கலாக நீரிழிவு, வெண்ணீர், தெளிநீர் என்னும் தலைப்பில் தனியாகவும் விளக்கியுள்ளார். இவை மேகநீர் இருபதிலுமடங்கியுள்ளன.

நாம் ஒவ்வொன்றின் பரிகார முறைகளை மட்டும் இங்கு கவனிப்போம்.

கல்லடைப்பு நோய்
(Gravel or Urinary Lithiasis)

பரிகாரம்

இந்நோய் தீக்குற்ற மிகுதியினால் உடல் நீரைச் சுண்டச் செய்து, சிறு நீர்வற்றி நீரின் உப்பை உறையச் செய்தும், கீழ் நோக்குங்கால் வன்மை இழந்திருந்தால் அவைகளை (கற்களை) அவ்வப்போது வெளியாக்காது தங்கச்செய்து இந்நோயைப் பிறப்பிக்கும். நீரைப் பிடித்துத் தெளிய வைத்தால் சிறு மணல் போலும் சிறு கற்களை காணலாம்.

ஆதலால் தீக்குற்ற மிகுதியைக் குறைக்கக் கூடியதான மருந்துகளையும் ஆகாரங்களையும் கொடுக்க வேண்டும். குளிர்ச்சியான கழிச்சல் மருந்துகளை குடிநீர் அல்லது நெய் வகையில் கொடுத்து பிறகு கற்களைக் கறைக்கக் கூடியதும் சிறு நீர் எரிச்சலையும் குருதியையும் அடக்கக்கூடியதுமான பொடி வகை, பற்பச் செந்தூரங்களைக் கொடுத்தல் வேண்டும். கற்கள் பெரிதாக இருப்பின் மருந்துக்கு வசப்படாது துன்பங்கள் அதிகமேற்படின் அறுவை மருத்துவம் புரிதல் நன்று என சித்த மருத்துவம் கூறுகிறது.

சித்த மருத்துவத்தில் கூறியுள்ள சில பரிகாரங்கள்:—

கழிச்சலுக்கு.

1. சிரமிவழுக்கை, முருங்கையிலை, சடைப்பூண்டு, மூக்கிரட்டை, தண்ணீர் விட்டான் கிழங்கு, நெருஞ்சில், நீர் முள்ளி இவற்றின் சாறு வகைக்கு படி 1/2. பசு நெய் ஒரு படி கூட்டியதில் நீர்முள்ளி விதை, தேற்றான்கொட்டை, வால் மிளகு, முருங்கைப்பட்டை, கள்ளிவேர், சிவதைவேர், கடுகு ரோகணி, இவை வகைக்குப் பலம் ஒன்று. இவற்றைப் பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து காலையில் ஒரு வேளை ஒரு தேக்கரண்டி யளவு கொடுக்க மலம் கழியும். சிறு நீர் எரிச்சலும் போம். குருதி கலப்பின்றி சிறு கற்களும் வெளியாகும்.

2. வேறு:—கொட்டிக் கிழங்கு, நிலப் பனைக்கிழங்கு, வெள்ளைக் கண்டங்கத்திரி வேர், கோரைக் கிழங்கு, நிலப் பூசினிக் கிழங்கு, நெருஞ்சிமுள், நீர்முள்ளி விதை, பாதிரிப் பட்டை, சிவதைவேர், மூக்குரட்டை வேர், பொடு தலைக்காய் இவை வகைக்கு பலம் பத்து. இவற்றை இடித்து நாலுபடி நீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அத்துடன் கல்நார் பற்பம், சிலாசத்து பற்பம், வெண்குங்கிலிய பற்பம், காவிக்கல் இவை வகைக்கு ஒரு விராகனிடையாகப் பொடித்துக் கலந்து வைத்துக்கொண்டு—ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை கொடுக்கக் குணமாகுமென்று சித்த மருத்துவம் கூறுகிறது. இந்த முறையில் ஏதோ பிசகுயிருக்கிறது. இந்த முறை நெய்யா அல்லது குடி நீரா வென்பதைச் சந்தேகிக்கும்படியிருக்கிறது. இந்த முறை நெய்யாகத்தானிருக்க வேண்டும். பசு நெய் படி 1/2 அந்தக்குடி நீர் வடிகட்டியதுடன் கலந்து மறுபடியும் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு அத்துடன் கல்நார் பற்பம் முதலிய நாலு பொடிகளையும் கலந்து வைத்துக்கொண்டு ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை கொடுக்கக் குணமாகும்

குடிநீர் வகை:—

1. நீர்முள்ளி, நெருஞ்சில், சிறுபீளை, ஏரழிஞ்சல் இவைகளின் இலைகள் சமம் கூட்டி எட்டுப் பங்கு நீர்விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடித்து காலை, மாலை ஆழாக்கு வீதம் சாப்பிடக் குணமாம். அதில் விரால் மீன் தலைக்கல் பொடித்து 1/2 சிற்றிடை கலந்து குடிக்கில் கல் உடைந்து வெளியாகும்.

2. வேறு:—பனங்குருந்து, நெருஞ்சில், நீர்முள்ளி, சூரை வேர், காஞ்சோறி வேர்? வில்வவேர், குரோசாணி ஓமம், நீர்க் கடம்பின் இலை இவை வகைக்கு சமம். முறைப்படி குடிநீராக்கி —ஒரு ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கக் கல் உடையும்.

3. கல்லடைப்பு நோயில் உபயோகிக்கக் கூடிய தனி மருந்துகளாவன:—

புல்பூண்டு வகை:—முள்ளிக்கீரை, பசலை, வசலை (இதுவும், ஒரு கீரை வகை) சிறு பீளை, முள்ளங்கி, வாழைக்கட்டை நீர்க்கடம்பு, மயிர் மாணிக்கம், சூரியகாந்தி, சாரடை, சத்திச் சாரணை, மூக்கிரட்டை, முருங்கை, நாயுருவி, அன்னக்காடி உயிர் வகை: விரால் மீன் தலைக்கல், பறப்பன, நடப்பன வற்றின் மண்டையோடு.

தரைப்படுபொருள்:—சிலாசத்து, கல்மதம், வெடியுப்பு, நவாச்சாரம், சீனாக்காரம், வெண்காரம் ஆகிய இவற்றை தனித்தேனும், கலந்தேனும் கொடுக்கில் கற்கள் கரைவதன்றி சிறு நீர்ப்பெருக்கை உண்டாக்கிச் சிறு கற்களையும், கரையப் பட்ட கற்களையும் வெளிப்படுத்தும்.

மாத்திரை வகை

1. கல்லுடைக்குடோரி:—இதில் ஒரு மாத்திரை வீதம் காலையில் வெள்ளரிக் குடிநீரிலும், மாலையில் நெருஞ்சிச் சாற்றிலும் கொடுத்துவர கல்லடைப்புத் தீரும் (சி. வ. யி. திரட்டு)

2. சலோதாரிமணி:—இதில் ஒரு மாத்திரை காலையில் மட்டும் தேன், பால் இவற்றிலொன்றில் அல்லது வேறு நீரைப் பிரிக்கக்கூடிய குடி நீருடன் கொடுக்க நீரடைப்பு, சதையடைப்பு நீங்கும். அன்றியும் அந்தரவாயு, சுரவாயு, இருமல் இவைபோம். மலம் கழியும் (சி. வ. யி. திரட்டு)

3. சலமஞ்சரி:—(இது செந்தூர வகையைச் சேர்ந்தது) இதில் பணவெடை வீதம் காலை, மாலை, இளநீர், பழச்சாறு, வெந்நீர், கரிசாலைக்குடிநீர் இவற்றிலொன்றில் கொடுக்க கவுசி, நீராமை, பாண்டு, சோபை, வீக்கம் இவை குணமாகும். நீரடைப்பும்போம் (பக்கம் 143-கண்ணுசாமியம்).

செய்முறை:—சங்குப்பொடி, சாத்திரபேதி, காந்தம், சிலாத்சத்து, கல்நார், வெங்காரம், அயம், கெந்தி படிகாரம் இவைகள் வகைக்கு கழஞ்சு எடையாகவும், இவைகள் சேர்த்த மொத்த எடைக்கு வெடியுப்பு கூட்டி மெழுகுபதமாயரைத்து மூசையிலிட்டு அனலில் வைத்து உருகினவுடன் ஆற்றி எடுத்துப் பணவெடையளவு முன் சொன்னபடி கொடுக்க அந்நோய்கள் **தீரும். கல்லடைப்புக்கும் உதவும்.**

சுண்ணம்—பற்பம்.

1. விரால் மீன் தலைக்கல்பற்பம்:—இதனைப் பந்நீர் விட்டு 2 நாள் கல்வத்திலரைத்து உலர்த்தி எடுத்துக்கொள்வதே போதுமானது. 1/2 முதல் ஒரு சிற்றிகை வீதம் காலை, மாலை சிறுபிளைக்குடிநீர் நெருஞ்சிக்குடி நீர் இவற்றில் ஒன்றில் கொடுக்க சிறு நீரிலுள்ள கற்களை உடைத்து வெளிப்படுத்தும்.

2. வெடியுப்பு சுண்ணம்:— இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை இளநீர் முள்ளங்கி, சிறுபிளைச்சாறு இவைகளில் கொடுக்க நீர்க்கட்டு, நீரடைப்பு, நீர் எரிச்சல் இவை தீரும். கல்லடைப்புக்கும் ஏற்றதுதான்.

3. பலகறைபற்பம்:—இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தேன், வெண்ணெய், நெய் அல்லது வேறு அனுப்பானங்களில் ஏதேனுமொன்றில் கொடுக்க அனேக நோய்கள் போம். (Vide Preparation shown below) கல்லடைப்புக்கும் நேர் மருந்தாக சித்தமருத்துவம் கூறுகிறது. வேறு நூல்களில் அவ்விதம் காணப்படவில்லை.

4. சங்குபற்பம்:—இதுவும் பல கறை பற்பம் போலவே 1 முதல் 2 அரிசி எடை தேன், வெண்ணெய், நெய் மற்றும் பல அனுப்பானங்களில் காலை, மாலை கொடுக்க அனேக நோய்கள் குணமாகும். (Vide three kinds of preparation shown below) ஆனால் சித்த மருத்துவத்தில் கூறியிருக்கிறபடி கல்லடைப்பு நேர் மருந்தென மற்ற நூல்களில் காணப்படவில்லை.

5. கற்பூர சிலாசத்து பற்பம்:—இதில் 2 முதல் 5 அரிசி எடை காலை, மாலை வெண்ணெய், நெய் மற்றும் பல்வேறு அனுப்பானங்களில் கொடுக்க அநேக நோய்கள் குணமாகும். (Vide 5 kinds of preparations shown below) நீரடைப்புக்கும் இதனை உபயோகிக்கலாம்.

N. B:—சிலாசத்து பற்பம் கலவைதான் கல்லடைப்பு, சதையடைப்புக்கு ஏற்ற மருந்து. (Refer to Silajath Bm. No. 3 and 4 below),

1. PALAKARAI BASPAM.

(S. R. Pharma)

Palakarai purified by boiling in puneer-jalam and Karchunna-neer in equal parts and then washed with water 3 lbs or quantity sufficient is taken. This is kept soaked in LIME FRUIT JUICE for one day, then rubbed in a Kalvom with the same juice for 2 or 3 days. Villais (Cakes) are made, dried, enclosed in a pair of suitable agals, margin provided with seven layers of clay cloth, dried and are subjected to putam with about 300 vratties.

Next, this Baspam is rubbed with the juice of CHIRUNERUNJI for 1 or 2 days, villais are made and subjected to puttam as before. On being cooled the Baspam is secured, powdered and preserved in a bottle. This much is enough for a good Baspam.

Dose.—2 to 4 grains may be given with Honey or Cows butter or Ghee or other suitable anupanams.

Uses.—All pithakapha diseases are relieved. This Baspam is added to our P.S.M.M. Baspam compound. Leucorrhoea, Gonorrhoea, Gleet, Urethritis, Scanty and burning micturition, Abdominal pains, Megakangai, Gunmam and animal poisonous affections, Kamalai, Liver and spleen diseases, Kasam, Swasam, Kayanoi, Visha jwaram, inflamation of Gastro-intestinal tract, Thirst and grahani are cured.

2. SANGKU BASPAM No. 1

(S. R. Pharma).

Sangku.—lbs 3 or quantity sufficient is taken, purified by boiling in a solution of puneer-jalam and Karchunna-neer in equal parts, then washed and dried. This is covered with the rubbed mass of either KULITHAMARAI LEAVES or KOVAI LEAVES about I thick, dried in the sun and is subjected to open putam in a pit with about 250 Vratties. This is then carefully removed from the fire early morning, kept in a basin, sprinkled a little of frest cow's milk over the burntup sangku and kept exposed to the mist. It becomes finely flowered (பூர்க்கும்) and a fine baspam is obtained. This is then powdered and preserved.

Note.—If necessary, it may be subjected to a second putam by rubbing with KOVAI LEAVES JUICE OR KULITHAMARAI LEAVES JUICE, villais are made, dried and subjected to put in a pair of suitable agals in a pit as before. This may not be necessary. In the first putam itself it becomes alright.

Dose.—2 to 4 grains twice a day may be given with honey or butter or ghee or other suitable anupanams.

U es:—Pithakapha diseases, jwaram, Vaitruvali, liver and spleen diseases are cured. Further Gunmam soolainoi, Dysmenorihoea, Rakthapitham, Eye diseases, Vatha-pirakopam, Convulsions, Piles, fistula and Vranams are also cured. It improves apetite.

3 SANGKU BASPAM No. II (OR VELLAI NIVARANI)

(S. R. Pharma)

Sangku:—lbs 2 or quantity sufficient is taken, purified by being boiled in a solution of puneer jalam (i.e. about 4 ounces of puneer dissolved in 2 Madras measures of water) and karachunnaneer in equal parts and then washed with water. Ofcourse it is then dried.

Next, **Vellai-erukkan flowers** are secured-quantity sufficient about double the weight of Sangku, rubbed into a fine paste and kavacham is made with this paste to the Sangku about 1" thick. This is dried in the sun and subjected to open putam in a pit with 250 to 300 Vratties. This is taken out carefully early next morning, sprinkled over it a little of **fresh cow's milk** and kept exposed to the mist. It becomes well flowered and a fine baspam is obtained This may be powdered and taken for use. Or this may be once again rubbed in a kalvam with **Vellai Erukkan flowers juice**, villai is made, dried, enclosed in a pair of agals and subjected to putam as before. Now the baspam is secured, powdered and preserved.

Dose:—2 to 4 grains may be given with suitable anupanams.

Uses:—Gonorrhoea, Leucorrhoea, and pitha-kapha diseases including Bronchial asthma and eusinophilia lungs are cured

4. SANGKU PASPAM No. 3 OR VAITR UVALI NIVARANI.

(S. R. Pharma)

Sangu 1 bs 3—broken in pieces, placed in a bowl, kept soaked with ghee for 2 days, next taken out, enclosed in a rubbed mass of **Thaivelai leaves**, covered over with plain Thaivelai leaves, Seelaiman 4 is applied, dried and subjected to puttam in a pit with 500 Varatties. On being cooled, next morning it is collected and the **Paspam powdered and bottled up.**

Dose:—One pinch to be put in the mouth and swallowed with a little of lime juice and licked up. Sugar may be added if necesary.

Uses—: Vaitruvali is relieved immediately.

5. KARPURA SILAJATHU BASPAM No. 1.

(S. R. Pharma)

Karpura silajaththu one viss is taken purified by keeping it immeresed in Ilaneer (Tender coconut water) for 1 or 2 days, boiled, washed with water and dried. Without boiling also, it may be washed.

Next, these silajathu pieces are enclosed with the rubbed paste of KOVAI LEAVES about ½ to one inch thickness, dried and are subjected to open putam in a pit in an airtight compartment with about 300 Vraties. On being cooled the next day, they are taken out and weighed.

Next, the same paspam is rubbed with the juice of KOVAI LEAVES for 1 or 2 days, Villais are made. dried, kavacham is made to these villais with the rubbed paste of kovai leaves and open putam is applied as before. One being cooled the baspam villais are secured, weighed, powdered and bottled up.

Dose:—5 to 10 grains B. D. may be given with cow's butter or ghee or other suitable anupanams.

Uses:—Burning micturition, burning of stomach, Gonorrhoea, Leucorrhoea, burning of the body feet and hands, all other pitha, diseases jwaraml, urethritis, Gastritis, stricture urethra biliousness, Hepatic and Gall bladder diseases are cured.

N.B.—This baspam may be given alone or with other baspams such as Pavala baspam, Sringi baspam Garudakal baspam and kalnar baspam, etc with better effect.

6. KARPURA SILAJATHTHU BASPAM No. 2 (OR ALBUMINUREA CURE).

(S. R. Pharma)

Karpura silajaththu one viss is taken, purified as mentioned under silajaththu baspam No. I, kavacham is made with the rubbed paste of CHIRUKEERAI LEAVES for about 1/2 to one inch thickness, dried, karchunnam seelai only one layer is made to each piece of silajathu and are subjected to heavy putam with about 300 Vratties in a pit in an airtight compartment. On being cooled, the yare taken out, weighed and powdered.

The above baspam is very well finished by the first putam itself and may be used. **Without karchunnam seelai kavacham also putam may be applied.**

However if the baspam is found not satisfactory in colour and fineness, then a second putam may be applied by rubbing the baspam with chirukeerai leaves juice for 1 day, Villai is made, dried, enclosed in suitable agals, clay cloth 5 layers are made, dried and putam is applied as above.

Dose:-Anupanam and uses are the same as that of No. I Silajathu baspam. In addition, this baspam is particularly useful in several types of ALBUMINUREA. - Remember this point very well please.

7. KARPURA SILAJATHU BASPAM COMPOUND No. 3

(S. R. Pharma)

1. Karpura silajaththu-one part of 5 oz
2. Vediuppu-1/2 part or 2 1/2 oz
3. Vengkaram-1/4 part or 1 1/4 oz
4. Nattu navaksharam-1/8th part or 5 drams
5. Kalnandu-1/4 part or 1 1/4 oz
6. Sagastrabedhi-1/8th part or 5 drams

These six ingredients are finely powedered and mixed together. A mud kalayam is taken, smeared inside with kovai leaves juice, dried, repeated this coating with the same juice and drying seven times on the whole, the above compound powder is put in the mud kalayam, covered with an agal, sealed with seven layers of cloth, dried and is subjected to putam with about 50 to 75 Vratties in a pit in an airtight compartment. On being cooled the next day it is taken out, the medicine inside is secured by breaking open the kalayam, weighed, powedered and bottled up. The colour is red.

Dose:-Anupanam and uses are the same as that of No. I Silajathu baspam. In addition this is very useful is Stricture Urethra, Kalladaippu and Suppression of urine.

8. **KARPURA SILAJATHU BASPAM No. 4**

(S. R. Pharma)

Karpura silajathu one viss is taken, purified in Ilaneer as mentioned under No. I Silajathu baspam. This is enclosed in the rubbed paste of Nayuruvi leaves, dried, Karchunnam seelai only one layer is made over the paste kavacham. and is subjected to open putam as mentioned under No. I Silajathu baspam.

It invariably becomes an excellent baspam even in the first putam itself and may be freely used. If however it is found not satisfactory, then a second putam may be applied by rubbing with the juice of Nayuruvi leaves, villais are made, dried, enclosed in Nayuruvi leaves rubbed into a paste, dried and open putam is applied as before.

Dose :-Anupanams and uses are the same as that of No. 1 to **No.** 3 Silajathu baspam. In addition this is particularly useful in Constipation, Neerkaduppu, Kalladaippu, Stricture urethra, burning of the body and limbs and all other pitha diseases.

9. KARPURA-SILAJATHTHU BASPAM No. 5

(S. R. Pharma)

Purified karpura silajaththu one viss is taken, enclosed in rubbed paste of kovai leaves about 1/2 inch thick, dried and subjected to open putam with about 400 Vratties in a pit in an airtight compartment. On being cooled, it is takenover, weighed, rubbed in a kalvam with Kumari juice (shotrukaththalai juice) villais are made, dried, enclosed in a rubbed paste of kovai leaves, dried again and open putam is applied as before. Now it becomes a fine baspam which may be powdered and bottled up.

Dose:-USES and ANUPANAM are the same as that of Silajaththu baspam No. I.

கல்நண்டு பற்பம்:—இதில் 1 முதல் 2 குன்றி எடை பால் அல்லது நீரைப் பிரிக்கும் குடிநீர் ஒன்றில் அனுப்பானித்துக் கொடுக்க (தினம் 2 அல்லது 3 வேளை) நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்க்கட்டு, நீர்க்குடுவை தாபிதம் இவை குணமாகும் (Preparation see below).

10. NANDUKKAL BASPAM.

(S. R. Pharma)

NANDUKKAL lbs 2—Purified by being boiled in a solution of puneerjalam and karchunnam neer in equal parts and then washed well with water. After being dried in the Sun, this is powdered, rubbed in a kalvam with (1) THE JUICE OF MULLANGI KILANGU for 2 or 3 days, dried with the kalvam and (2) with THE JUICE OF CHIRUPEELAI SAMOOLAM for another 2 or 3 days. It is then allowed to dry in the sun thoroughly well for 5 days with the kalvam, finally powdered and bottled up. No need to subject this to putam.

Dose:-2 to 4 grains B. D. may be given with **cow's** milk or **any** Diuretic decoctions or juices.

Uses:-Retention of urine, Urinary obstruction due to Urinary lithiasis and Cystitis etc are relieved (Neerkattu, Neeradaippu and Kalladaippu are particularly relieved)

N. B.-Even without purification this baspam can be prepared to avoid bad smell.

செந்தூரம்.

1. வெடி அன்னப்பேதிச் செந்தூரம்:—ஒரு குன்றி மணி அளவாக காலை, மாலை தக்க அனுப்பானங்களில் கொடுக்க பாண்டு, சோகை, காமாலை, பெருவயிறு இவை குணமாகும். நீரைப் பிரிக்கும் மற்ற மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கும் போது நீர்க்கட்டு, கல்லடைப்பு, நீரடைப்பு இவற்றை நீக்க உதவி புரியும் (S. R. Pharma—Preparations are shown below).

2. வெடியுப்பு செந்தூரம்:—இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை நீரில் கலந்து சாப்பிட குன்மம், மேகம், நீர்க்கட்டு, பாண்டு, சோகை இவை போம். இதன் செய்முறை யூகிவாத காவியத்தில் உள்ளதென்றும், அதனை அடையார் கூட்டுறவு நாட்டு மருந்துகள் தயாரித்து விற்பனை செய்யும் ஸ்தாபனத்தில் பிரசுரமாகியுள்ள Pharmacopiea of Siddha Medicins. என்னும் புத்தகத்தில் இம்மருந்தின் செய்முறையை எழுதியிருக்கிறார்கள். இம்மருந்தைச் செய்து பார்த்து அனுபவித்தவர்களாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரை அதில் எழுதியுள்ள முறை சரியில்லை. ஆதி நூலைப் பார்த்து சரியான ஆராய்ச்சி செய்யவேணுமென்பது என் கருத்து எனினும் வெடியுப்பு சுண்ணம், வெண்காரச் சுண்ணம், கல்லடைப்பு நோயில் பயனளிப்பதுபோல வெடியுப்பு செந்தூரம் பயன்படுமென நான் கருதவில்லை.

3. வெள்ளிச் செந்தூரம்:—இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தக்க அனுப்பானங்களில் கொடுக்க சுரம், சந்நி பாதம், பாண்டு, காமாலை, குன்மம், சூலை, கயம், பிடிப்பு, மேகநீர் இவை நீங்கும். சித்த மருத்துவத்தில் கல்லடைப்பு நோய்க்கு இதனை மருந்தாகக் கூறியுள்ளார். இதன் செய்முறையை சி. வயி. திரட்டில் கூறியுள்ளபடி செய்தால் செந்தூரமாகாது. ரசம், கெந்தகம் அல்லது லிங்கம் இவை கூட்டாமல் வெள்ளியைச் செந்தூரிக்க இயலாது. தனி கெந்தியை மட்டிலும் வெள்ளியுடன் சேர்த்து சி. வயி. திரட்டில் கூறியபடி செய்து ஏமாந்தவன் நான். வெள்ளியுடன் இரசம், கெந்தி இரண்டும் சேர்க்காமல் செந்தூரம் சித்திபெற மாட்டாது. இதனைச் செய்ய விரும்புவோர் ''கண்ணுசாமியம்'' என்னும் நூலில் பக்கம் 122, 123-ல் கூறியுள்ள முறைப்படி செய்தால் மட்டும் வெள்ளி ரச செந்தூரம் செய்து முடிக்கலாம். இது தான் எங்களது அனுபவமுங்கூட. கவனிக்கவும்.

4. இரச செந்தூரம்:—இதில் 1/2 முதல் 1 குன்றிமணியளவு காலை, மாலை தக்க அனுப்பானத்தில் கொள்ள மூலம், மேக நோய், பவுத்திரம், பழஞ்சுரம், புண், புரை, சிரங்கு, சொறி முதலியன குணமாகும். சித்த மருத்துவத்தில் இதனைக் கல்லடைப்பு நோய்க்கு மருந்தாகக் கூறியுள்ளார். மற்ற மருந்துகளோடு சேர்த்துக்கொடுக்கும்போது ரச செந்தூரமும் துணை செய்யக்கூடும் (S. R. Pharma—Preparations are shown below).

II. ANNABEDHI CHENDURAM No. II OR VEDI-ANNA-BEDHI CHENDURAM (SPECIAL)

(S. R. Pharma)

1. Annabedhi (purified by keeping it soaked in lime fruit juice for one day and then exposing it to the sun to be dried for 2 or 3 days) is taken lbs 2-8-0.

2. Purified Vediuppu lbs. 1.4.0

These two ingredients are taken in the above preparations powdered in a kalvam, mixed rubbed with LIME FRUIT JUICE for 2 or 3 days, spread in a suitable mud chatty, dried, mouth covered with a suitable agal, clay cloth seven layers are provided to the margin, dried and subjected to putam in a pit in an airtight compartment with about 300 Vratties. On being cooled it is taken out, the chenduram is secured and weighed.

Next, this chenduram is rubbed with POTRILAIKAIYAN JUICE for 2 days, Villais are made, dried enclosed in a pair of suitable agals, clay cloth seven layers are made, dried again and subjected to putam as before with about 200 to 250 Vratties. Now it becomes quite alright.

If howerver the chenduram is not properly finished, then it may be onec more rubbed with LIME FRUIT JUICE AND POTRILAIKAIYAN JUICE. VIillais may be made, enclosed in a pair of agals and putam applied as before. Th's chenduram if properly done becomes quite alright even in the first or the second putams.

Note:-Each time for the first, second and third putam rubbing may be made with both the juices namely LIME FRUIT JUICE AND POTRILAIKAIYAN JUICE. That is to say, first the ingredients of the chenduram are rubbed with LIME FRUIT JUICE for 2 days, allowed to dry in the Sun with the kalvam, again rubbed with POTRILAI-KAIYAN JUICE for 2 more days, then Villais are made and putam is applied as usual.

In one or two putams a very good chenduram is obtained.

Dose:-2 to 4 grains may be given 2 or 3 times a day with honey or other suitable anupanams.

Uses:-Pandu, Sobai, Kamalai, Liver and spleen enlargements ascites and agnimantham etc. are cured.

12. RASA CHENDURAM No. I OR RASA THALAKA CHENDURAM.

(S. R. Pharma)

1. Pui ied patharasam 6 tolas.
2. Purified Ghendakam—6 tolas
3. Purified Thalakam—6 tolas

Rasam and Ghendi are mixed together in a kalvam as per rules, rubbed thoroughly well until the compound becomes utter black, placed in an agal, fried gently on charcoal fire until smoke ceases, placed again in the kalvam, added Thalakam fine powder, rubbed again with Kandangathiri samoolam juice for 1 or 2 days allowed to dry with the kalvam, powdered again and is then subjected to kuppierippu in a Valukam as per rules for six hours by means of deepagni and another six hours by means of kamalagni on the first day from 6 A. M. to 6 P. M. The chattey kavacham is allowed to remain over the oven that night without burning. On the second day the fire is continued as Kamalagni for 6 hours and kadagni for another 6 hours. No more erippu is necessery.

On being completely cooled the next day, the kavacham is opened, the kuppi is break-opened and the sublimed melted and solidified Rasachenduram is secured, powerdered which is red in colour, and bottled up.

Note:-The Kuppi should hold the powder of Rasam, Ghendi and Thalakam compound about half of its capacity; and the mouth of the kuppi should be covered with a piece of asbestus or palappakkal or odu which is also sealed with seven layers of clay cloth. The Valukam chattey is also kept covered with its pair, their margin is sealed with seven layers of clay cloth and dried. These are essential points to be noted. There is no loss of weight in the finalised chenduram if only all the above precautions are closely observed and the Erippu is properly done. This chenduram is equivalent to Gold chenduram in its effect on diseases.

Dose:-1 to 3 grains may be given with Thirrukadugu churnam and honey or other suitable anupanams.

Uses:-Kasam, swasam, Kshayam, particularly swasakasam and erappunoi, kaphavadha-jwaram, megavayu, megavranam etc., are cured. It improves complexion and general health. A course of 3, 5 or 7 days at a time may be given twice, a day.

N B:-1. For the purpose of Thondham or admixture of mercury and sulphur it is better to place an agal or chattey over charcoal fire or sand bath, place the sulphur powder in the agal, while it is being melted the mercury is added and vigoursly stirred or kindled with a rod carefully until both mercury and sulphur together become well united and dark in colour. On being cooled, this medicine is scraped and used for the above chenduram or for any other Rasa chenduram.

2 Frying after rubbing mercury and sulphur may also be done as mentioned in the process above.

13. RASA CHENDURAM No. II OR RASA PURA CHENDURAM.

1. Purified Padharasam
2. Purified Ghendakam
3. Purified Rasakarpuram

} of each in equal parts or about 5 tolas each.

Ghendakam and mercury are made Thonthippu as mentioned under foot note of Rasa chenduram No. 1 or rubbed together in a kalvam until the compound becomes utter black and then fried gently and carefully in an agal over charcoal fire until the smoke ceases. Rasakarpuram is then finally powdered, added to the Rasam and Ghendi compound and ground well together for 2 or 3 days plain without using any juice or other fluids. This powder is then subjected to kuppi erippu in valukam in the same way as that explained under Rasa chenduram No. I Deepagni 6 hours, Kamalagni 6 hours on the first day and no erippu that night. Next morning burning is continued as Kamalagni 6 hours and Kadagni for 6 hours.

On being cooled the kuppi is break-opened and the sublimed chenduram is carefully secured, weighed, powdered and bottled up. There is no loss of weight. The colour is pure red. The mouth of the kuppi is kept closed by means of a Palappakkal or a pie e of asbestus which is also provided with seven layers of clay cloth as in the case of Rasa chenduram No. I and Kalamega narayana chenduram The Valukam chattey is also kept covered with its pair and their margin is sealed with seven layers of clay cloth.

Dose: 1 to 3 grains may be given with Thrikadugu churnam and honey or with any other suitable anupanam twice a day.

Uses:-Vranam, Sinuses, Fstula, Cancer, Leprosy, other worst skin diseases, syphillis and perforating ulcers foot etc. are cured.

14. SWARNA VALAI RASA CHENDURAM OR RASA CHENDURAM No. III (TRADITIONAL)

(S. R. Pharma)

1. Purified Patharasam—12 tolas.
2. Purified Ghendakam—6 tolas
3. Purified Thalakam—3 tolas

Rubbed together in a kalvam as per rules for two days, of course the longer they are rubbed together in kalvam the better it is for the finest finish of the chenduram. This compound powder is put in a suitable amber coloured bottle, N. M. or kasi kuppi to which seven layers of fine clay cloth are already applied dried and kept ready for use. The powder should occupy, only about half of the capacity of the kuppi. The mouth of the kuppi is provided with a piece of asbestus or odu for covering and seven layers of clay cloth or made to the junction of the kuppi and this covering odu. On being dried it is subjected to burning in Valukam as per rules. The lower chattey containing sand and kuppi is covered with another upper chattey of its own size and capacity. Seven layers of clay cloth are also made to junction of the two chatties. The kuppi indise the chatty is wholly covered with sand. It is then burnt for about 12 to 18 hours by deepagni, kamalagni and kadagni. During night it is kept on fire (தணல்) without burning, On being cooled the kuppi is carefully taken, out scraped out of its clay cloth, eleaned break-opened and the melted and sublimed solid medicine inside the kuppi which resembles that of jambul fruit (Navar fruits) is secured. On being finally powdered in a kalvam it becomes an excellent red chenduram.

Note:-This is a traditional process by which the chenduram is got without loss of weight.

Does:-1 to 2 grains B. D. with suitable anupanam may be given. **This may be used just like Gold chenduram.**

Uses:-This can be used for all diseases particularly Pulmonary Tuberculosis and other lung affections. Fever, skin diseases syphilis leprosy, cancer, Bronchial asthma, Viranams Asthma impotency, Seminal loss are all treated with this fine **chenduram**.

N. B:-In our further experience we have used Vediuppu Dravakam No. I for rubbing the three ingredients, dried, powdered and then subjected to kuppi erippu. This has been a very fine red coloured chenduram.

மேற்கூறிய பற்பம், சுண்ணம், செந்தூரம் இவைகளை ஏதேனும் ஒன்று பலவற்றைக் கலந்து துணைக் குடிநீருடன் கொடுக்கலாமெனக் கூறியுள்ளார்.

உணவு

நீரைப் பெருக்கி நீர்ப்பையைக் கழுவுவது போன்று சிறு கற்களை வெளியாக்கிச் சிறு நீரைப் பெருக்கக் கூடிய உணவுகளை கொடுத்தல் வேண்டும். குருவை அல்லது மணக்கத்தையரிசியா லாக்கிய சோறும், முள்ளங்கிக் கீரைத் தண்டு, வாழைத்தண்டு, சிறு கீரை, அவரை, வெண்டை, வசலைக் கீரை, தாளிக்கீரை, பாசரைக் கீரை, காசினிக் கீரை இவைகள் போன்றவைகளைக் கொள்ள வேண்டும். பார்லியரிசி கஞ்சியும் கொள்ளலாம். கற்களை உண்டாக்கக்கூடிய உப்பு வகைகளைப் பெருக்கக் கூடிய காய்கறிகளில் தக்காளி, கோஸ், வெள்ளைப்பூ (Cauli flower) முதலிய பெங்களூர் காய்கறிகளை நீக்கல் வேண்டும். அன்றியும் **உப்பு வகைகள் நிறைந்த நீர்களைப் பருகல் கூடா.**

சித்த மருத்துவத்தில் இல்லாத சில பரிகாரங்களைக் கல்லடைப்பு நோய்க்கு கீழே காணலாம்.

1. சிறு பீளைக் குடிநீர் மிகச் சிறந்தது, இம்மூலிகையை கற்பேதி என்றும், பாடாணபேதி என்றும் அழைப்பர். (i) இதன் இலைச்சாற்றில் 1/8 முதல் 1/4 ஆழாக்கு வீதம் காலை, மாலை சாப்பிட்டாலும், (ii) இதன் வேரைக் குடி நீரிட்டுக் குடித்தாலும், (iii) சிறு பீளை வேர்ப்பட்டை பனை வெல்லம் இவை வகைக்கு பலம் ஒன்று சேர்த்து மைபோலரைத்து 1/2 ஆழாக்குப் பசுவின் பாலில் கலக்கிக் காலை, மாலை உட்கொண் டாலும், (iv) சிறு பீளை வேர், நெருஞ்சிச்ச மூலம், மாவிலிங்கம் பட்டை, பேராமுட்டி வேர் இவை வகைக்கு பலம் கால் எடுத்துச் சிதைத்து, மூன்று ஆழாக்கு நீர்விட்டு ஒரு ஆழாக்காக வற்றக் காய்ச்சி வடிகட்டி தினம் காலை, மாலை குடித்து வந்தாலும் கல்லடைப்பு, நீரடைப்பு, மூத்திரக்கிரிச்சரம் இவை நீங்கும் (vide குணபாடம் Part-I)

N. B.—வெங்காரம், சீனாக்காரம், வெடியுப்பு, கல்நார், சிலா சத்து நண்டுக்கல், விராலமீன் தலைக்கல் இவற்றின் பற்பத்திற்கு மேற்கண்டவற்றுளொன்றை அனுப்பானமாக உபயோகிக்கலாம்.

2. கோழி வயிற்றுக்குள் கற்கள்யிருக்கப்பட்ட ஒரு ஈரல் யிருக்கிறது. அதனைப் பல பெயர்களால் அழைப்பர்கள். தாமரங்காய் என்றும் கல்லீரல் என்றும் சொல்லுவார். அந்த ஈரலுக்குள்ளிருக்கப்பட்ட கற்களைச் சேகரித்து சவ்வுடன் முட்டை வெண் கருவிட்டு மைபோலரைத்து நயம் பச்சைக் கற்பூரத்திற்குக் கவசித்து, சிறு அகலில் வைத்து மேலகல் மூடி சீலை மண் வலுவாய்ச் செய்து கஜபுடம்போட்டு புடம் எரிந்து அமர்ந்தவுடன் எரு தணலாயிருக்கும் போதே புடம் பிரித்து எடுத்து ஆறவைத்து அதிலிருக்கும் பற்பத்தை எடுத்து வைத்துக்கொண்டு—ஒரு குன்றிமணி எடை காலை, மாலை வெண்ணெயில் கொடுக்க நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், நீர்ச் சுருக்கு, நீரடைப்பு கல்லடைப்பு இவை குணமாகும் ("Manuscript").

3. முத்து பற்பம், 4. முத்துச் சிற்பி பற்பம் இவைகளை தக்க அளவில் காலை, மாலை, சிறுபீளைக் குடிநீரில் கொடுத்து வர கல்லடைப்பு, நீரடைப்பு நோயில் நல்ல பலனைத் தரும் (Preparation see below).

15. MUTHU BASPAM

(S. R. Pharma)

SPECIAL NOTES: It is essential (1) To give a number of coatings with an one of the juices of Thulasi leaves or kovai leaves or kuppaimeni leaves or beetle leaves to the inner aspect of the upper erippu chattey before being covered over the bottom chattey. (2) You must see that all water in the bottom chattey is dried up in the hot Sun prior to its being covered over with the upper chattey or else while it is being burnt over the fire, the water inside the bottom chattey (from out of Shotrukathalai pulp) begins to boil, steam is increased inside and the upper chattey is sometimes thrown out or broken and the medicines are also thrown out, scattered and spoiled. To avoid this sequel the moisture of shotrukathalai pulp in the kavacham should be dried well and the neck of both the chatties must be tied together with a wire. (3) Sometimes after twice erippu, the baspam and the chenduram may not be perfect. The paspam may be having porticles of rollable mercury or its colour may not be good and the fineness and colour of the chenduram may not also be good. Under such circumstances it is advisable to subject the preparations for a third time by rubbing with the same kumari milk or juice making villai, kavacham and erippu as before for 12 to 18 hours by the same gradation or degree of fire. Now you will have excellent baspam and chenduram separately in a single process. (4) If fried Vengkaram is used the Virulance of the parpam is mitigated or minimised and the colour is good. On the other hand if raw Vengkaram is used, the finished baspam is of dusky colour and it is very powerful, strong or virulent. That does not matter much. You can administer Padikara baspam prepared with butter or white of eggs in addition to Rasa baspam to avoid mercurialism. The latter strong Rasa baspam act quicker while the former rasa baspam is a bit slow in effect with out alarming reactions. (5) While you perform erippu, it must be properly and cautiously regulated or else if the fire is more than what is necessary for each erippu, the baspam will be loosing in quantity and if the fire is less on the other and the final Product of both the baspam and chenduram will not be materialised in quality. The physicians should therefore be careful regarding the pakam of erippu by their experience especially in this perparation. (6) The gorgle churnam abovementioned consists of the following ingredient-**Karuvelam pattai** well pounded about a handful is taken, **kalipakku** No. 6 to 8 **kasukatti** one pice, **padikaram** one pice, **mashikoi** 2 or 3 **kadukoithole churnam** or preferably **Thiriphala churnam** one teaspoonful water 8 lbs is added, boiled, reduced to one half. filtered then and there and used for gorgling the mouth several times a day. In a day or two mercurialism is cured.

ஜெய சூத பற்பம்'' அல்லது ''சண்ட ரச பற்பம்''
வேறு-யூகிமுனி வர்தவயித்திய விளக்கம் 200-எட்டுப் பிரதி)

(1) ''நாட்டுப்புபடி நான்கு நலமான செங்கல்மா
நாலத்தொன்று
காட்டு வறுசட்டி நிறைகனிவான சூதம்நடு
கருதியிட்டு
மூட்டுவது மேல்மூடி முனையான சீலை செய்
முந்நூறு நாழி
காட்டமிடு ஜெயசூதங்கனிந்து வழி சகல நோய்
காணாதோடும்.
ஏட்டதனில் சுரைக்காய் தாணிதமாகுங்கறிக்
குதவாதின்பமாமே''.

''சீன சூத பற்பம்''.

சீனமது பலமொன்று ஜெயமா சூதனமெடை
சேர்த்து நீயும்
கானலாய்க்கடமிட்டுக் கருத்தாக எரித்தெடுக்க
காண வெள்ளை
தானகமாய்க் கடுகிலிடுதருகாது குட்டமெல்லாந்
தானேயோடும்.
கானகத்திலலைந்து மென்ன காட்டிலே திரிந்துமென்ன
காணுவாயே.''

[இதன் பொருள்]

ஒரு சதை எரிப்பு சட்டி எடுத்து அவற்றிலொன்றில் நாலுபடி நாட்டுப்பும் ஒரு படி செங்கல் மாவும் இடித்துக் கலந்து சட்டியில் அரைப்பாகம் இருக்கக்கூடியதாகப் போட்டு நடுவில் குழி பறித்து அதில் சுத்தி செய்த ரசம் விட்டுவைத்து மேற்சட்டி மூடி எழுசீலைமண் வலுவாய்ச் செய்து வட்டடுப் பின்மேல் வைத்து முந் நூறு நாழிகை முத்தீயாக (தீபாக்கினி கமலாக்கினி காடாக்கினிய க) எரித்து ஆற விட்டுக் கவசத்தை ஜாக்கிரதையாகப் பிரித்தெடுக்க மேற்சட்டியில் ரச பற்பம் பதங்கித்திருக்கும். இதனைப் பன்றி மயிர்க் கத்தையால் வழித்தெடுத்து கல்கார்க்குப் பாட்டிலில் வைக்கவும். இது வெகு காட்டமுள்ள ரசபற்பமாகும். இதனையே 1/4 முதல் 1/2 அரிசி எடை பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் தேகபலம் நோயின் கடுமையறிந்து கொடுக்க சகல நோய்களும் தீருமென்கிறார்.

இந்த ஜெயரச பற்பத்துடன் சம எடை சீனாக்காரம் சேர்த்துப் பொடித்துக் குடுவையிலிட்டு மேல் மூடிச் சீலை மண் வலுவாய்ச் செய்து சிறு தீயில் (தீபாக்கினி அல்லது தீபம்போல்) எரித்தெடுக்க வெண்மையான பற்பம் பெருமி நிற்கும். அதனைப் பொடித்துப் பாட்டிலில் வைத்துக் கொண்டு 1 முதல் 2 அரிசி எடை திரிகடுகு தேனில், காலை மாலை கொடுக்க குட்டம் நோய் முதல் எல்லா நோய்களும் போம்.

(S.R.Pharma)

''சீன ரச பற்பம்'' அனுப்பானம் கூறுகிறார்.

(3) ''சேதமறச் சீனரசஞ் சேர்ந்தெரிக்க நீறியது
செருமி நிற்குங்
காதலுடன் திரிகடுகில் திரிமூன்று நாளிட்வே
கருங்குட்டம் போம்
வாதபித்த சிலேத்து மத்தால் வரும் நோய்கள்
[மருந்தினால்
வலுவாய் நீங்கும்
பூதபத்ரகாளிகறி பொங்கலிட்டாற் போமோ சொல்
புனிதவானே''.

என்பதினால் முன் தயாரித்த சீன ரச பற்பத்தை தக்க யளவில் திரிகடுகில் காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க கருங்குட்டம் போம். அத்துடன் வாதபித்த சிலேத்துமத்தாற் பிறக்கும் சகல நோய்களும் குணமாகும் என்கிறார்.

சகல நோய்களுக்கும் ''சீனவன்னி பற்பம்''

(4) ''குட்டமுதற் போகவே குணமான வன்னி பற்பம்
குணமே செய்து
தட்டாமற் சீனமது சரியாய்ச் சேர்த்து நீ
சரியாயாட்டி
முட்டாகக் கடத்திலெரி முனிவாக வெள்ளையா நாம்
மீறுநோய் போம்
திட்டாக வாதம் வரச் சீராகச் சுட்டுப்பார்
திடமுமாமே''.

என்பதினால் சாதிலிங்க பற்பம் செய்து சமம்படி காரம் கூட்டிப் பொடித்துக் குடுவையிலிட்டு மூடி எழுசீலை மண் செய்து முன்போல் தீபாக்கினி எரித்தெடுக்க வெண்மையான பஸ்பமாகும். இதனை திரிகடுகு தேனில் 1 முதல் 2 அரிசி எடை மூன்று நாட்கள் கொடுக்க சகல கொடிய நோய்களும் குணமாகுமென்கிறார்.

(5) சர்வநோய் சங்கார ''காடிக்கார ரசச் சுண்ணம்'' கொடிய நோய்கள் எல்லாவற்றிலும் இதனைப் பிரயோகிக்க நல்ல பலனைக் கொடுக்கும். ஆபத்துக்களை விரைவில் நீக்கும். மூன்று வேளை மருந்துக்கு மேல் இதனைக் கொடுக்கவேண்டியிராது. (Preparations done and uses-See below.)

சர்வ நோய் சங்கார காடிக்கார இரச சுண்ணம்

[கோஷாயி முறை]

உப்பு 6 பவுண்டு எடுத்து இளநீர் 2 பவுண்டு அதில் சிறிது சிறிதாக விட்டு அரைத்து உருண்டையாக உருட்டி அடி கனத்த மட்சட்டிக்குள் வைத்து மேற்படி உப்பு உருண்டையில் நடுமையம் சிறிய பள்ளம் செய்து வைத்துக் கொண்டு அது உலர்ந்தபின்—குகை செய்யும் மருந்துகளாவன: சுத்தி செய்த கெந்தி-வீரம்-பூரம்-தாளகம் லிங்கம்—வெள்ளை-கௌரி இவ்வேழு சரக்குகளும் வகைக்கு விராகனிடை 5 வீதம் எருக்கம்பால் விட்டரைத்துக் குகையும் மூடியும் செய்து மூடியில் 5 துவாரங்களிட்டு உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு சிறிய குடுவையில் சித்திரப் பாலாடையை வேருடன் பிடுங்கி வந்து அம்மியிலிட்டு மைபோலரைத்து பாதி கலசம் வரை அரைத்த மருந்தை அமுக்கிவைத்து அதன் மேல் வெள்ளிக் கடிக்காரம் விராகனிடை 5 எடுத்துக் குடுவையிலுள்ள அரைத்த மருந்தில் சொருகி வைத்து அதன் மேலும் மறு பாதிக் குடுவைக்கு அரைத்த மருந்தை வைத்து அமுக்கி சீல் மூடி எழுசீலைமண் வலுவாகச் செய்து கம்பி கட்டி உலர்த்தி பத்து வராட்டியில் காற்றில்லாத இடத்தில் புடம் போடவும். ஆறிய பிறகு மருந்தை எடுத்துக்கொண்டு முன் சித்தபடுத்திய பாடாணக் குகைக்குள் சுத்தி செய்த பாதரசம் விராகனிடை 20 விட்டு அதன்மேல் புடமிட்டெடுத்த வெள்ளிக் கடிக்கார பற்பத்தை பொடித்துப்போட்டு அதன்மேல் "கோடகசாலை இலை"யைக் கசக்கிப் பிழிந்து சில்மூடி. மேற்கூறிய உப்பு உருண்டைப் பள்ளத்தில் வைத்து அமுக்கி—உப்பு பெரும் மணிகளைப் பொறுக்கி எடுத்துக் குகை தெரியாமல் மூடி மறைத்து, வாய் பொருந்தியான மேல் சட்டி மூடிக்கெட்டியாகச் சீலைமண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்து தீபாக்கினியாக மூன்று சாமமும், கமலாக்கினியாக மூன்று சாமமும் காடாக்கினியாக மூன்று சாமமும் எரித்து நன்றாய்க் குளிர ஆறிய பின் இறக்கி கவசம் பிரித்து மேற் சட்டியில் பற்றியிருக்கும் பதங்கத்தை பன்றி முடியால் சுரண்டி எடுத்து புட்டியிலடைக்கவும்.

அளவு:—இந்தச் சுண்ணத்தில் அரிசி எடை எடுத்து அரைத்த சுக்கு, அரைத்த மிளகு, பனை வெல்லம், கரும்பு வெல்லம் ஏதேனுமொன்றில் அனுபானித்து காலை மாலை இரு நேரம் 3 முதல் 5 நாட்களுக்கு முழுங்கச் செய்யும் முழுங்கச் சக்தியில்லாதவர்களுக்கு தாய்ப்பாலில் அனுபானித்துக் கொடுக்கலாம்

தீரும் நோய்களாவன:— இதனை எல்ல நோய்களுக்குமே ஒன்றிரண்டு வேளை கொடுத்து அப்பால் அந்தந்த நோய்களுக்குரிய மற்ற மருந்துகளை உபயோகிக்கலாம். மரணத்தை தடுத்துப் பிணிகளின் கொடூரத்தைத் தணிக்கும் பொருட்டு இவ்விதம் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

மற்றப்படிக்கு சன்னி, சுரம், வாய்வு, கபமடைப்பு, வாதநோய் சூலை நோய், குன்மம், மூர்ச்சை, புற்றுநோய், பெருவியாதி, வலி முதலிய நோய்கள் கொடூரம் தணிந்து குணமாகும். எல்லா வித நோய்களுக்கும் அனுபானம் அறிந்து கொடுக்கலாம் தயக்கம் வேண்டாம். கைகண்ட மருந்து, கேள்வி முறை.

பத்தியம்:—நோய்களுக்கேற்ற பத்தியம் வைப்பது உத்தமம் வெள்ளாட்டு வற்றல், வறுத்த உப்பு சேர்க்கலாம். புளி, புகை, புகையிலை, வாய்வு பண்டங்கள் கூடா.

குறிப்பு:—(1) மேல் சட்டிக்கு முள் முருக்கு இலையை இடித்துச் சாறு பிழிந்து பொட்டியில்லாமல் (Pores) பூசிக் கொள்ளவும்.

(2) இக்காடிக்கார சுண்ணம் கொடிய காரமாக யிருக்கும். வாய் பிடிக்காது. எல்லாப் பிணிகளுக்கும் இம்மருந்து கொடியதான வைரி போன்றது. இம்முறை புத்தகங்களில் இல்லை. கேஷாயிமிறை— ஒரு பெரியவாள் சொல்லக்கேட்டு பரம்பரையாகக் கையாண்டு வந்தது. கைக்கண்ட மருந்தென கூறுவர்.

Sarvanoi Sankara Kadidara Chunnam No. 1 or Compound Kadikara Mercury Chunnam

(TRADITIONAL)

(a)	Kariuppu (common salt)	1 1/2 Madras measures
	Tender Coconut-water about	1/2 Madras measure

These are rubbed together in a kalvam into a paste and made into a big bolus or ball. This ball of salt is kept in a wide-mouth erippu chatty, a pit is made in the ball of salt, allowed to dry in the Sun and the following drugs are then taken separate

(b)	Ghendhi Veeram Lingam Rasakarpuram Thalakam Vellaipashanam Gowri pashanam.	These seven ingredients of each 5 P.W. (purified ingredients) are taken, rubbed with *Erukkan paul* (Arkaksheeram) for one day, made into a suitable kugai and cover, in the cover 5 holes are perforated and allowed to dry in the shade.

(c) Then we have to prepare laghu or **"simple kadikara chunnam" as follows.—**

Red Amman Pacharisi or Chithrapaladai samoolam is securde, rubbed in a grinding stone into a fine paste without using water and taken about the size of a mango. Out of this mass, half of the quantity is placed in a small mud kuduvai, dipped in the 'paste mass small pieces of SILVER NITRATE STICKS about 5 p.w. without touching each other and the other half of the rubbed paste mass is placed over the kadikaram sticks. The kuduvai is thus filled with the herbal paste, pressed gently, the mud kuduvai is covered with a lid, seven layers of clay cloth are made to the margin, dried and is subjected to putam with about 10 varatties in a pit in an airtight compartment. After it is cooled, it is taken out, the chunnam thus formed is of ASH-COLOUR, at times WHITE and stands to the test of turmeric as chunnam. Sometimes the putam while it is under fire may explode and in that case the kavacham may be taken out, clay cloth renewed and again subjected to putam as before. To prevent explosion, it is better to wind the lid and the neck of the kuduvai with a suitable WIRE and tied. This stands quite alright during burning and it does not explode or give way. If the fire becomes excessive, at times the Silver Nitrate gets reduced into SILVER PARTICLES and if the fire is less, the medicine mass is not well burnt and the chunnam is BLACK in colour. Hence the estimation of varatties to the size of the kavacham should be appropriate. This chunnam is said to be "Simple or Laghu Kadikara chunnam". This simple kadikara chunnam may be used in 1 to 2 grains dose internally in serious diseases with good effect.

Next, with this chunnam as the basis, we have to prepare "**Compound Kadikara-Mercury Chunnam**" as follows.—

(d) **Purified Patharasam** 20 p.w. is 'poured in the medicinal kugai mentioned under (b) above, **Laghu kadikara chunnam** mentioned under (c) is added to the purified mercury in medicinal-kugai, an ounce or two of "**Kodaka Salai leaves juice**" is sprinkle over it, the medicinal kugai is covered with the perforated medicinal cover mentioned under (b) and this medicinal kugai containing mercury and kadikaram simple chunnam is placed in the pit of the salt mass already kept in the erippu chatty mentioned under (a) above. Big crystals of common salt are placed over the surface of the kugai thus entirly covering the medicinal-Kugai and the bottom erippu chatty is then covered with its pair of upper chattey. This upper chattey is better treated first by smearing inside with the juice of "*Mulmurungai leaves*" and dried. This repeated several times before being used as a covering for the erippu chattey. This coating of the juice inside the covering chattey is done in order to closeup all minute pores in the new mud chattey.

Thereafter, seven layers of clay cloth are made to the junction of the erippu chatties, dried placed over *Vattaduppu* or round oven and burnt for 10 to 12 hours each of deepagni, kamalagni and kadagni (total of about 30 to 36 hours). On being cooled, the chattey is gently removed from the oven, placed flat on the floor and the kavacham is carefully removed. The white sublimation (pathangam) in the upper chattey inside and on the sides of the bottom chattey is carefully collected with a suitable brush. powdered, weighed and bottled up. This is what is known as "**Compound Kadikara Mercury Chunnam**".

Dose.—1/2 to 1 grain may be given twice a day in capsules or palm jaggery for a period of 3, 5, 7 or 9 days depending upon toleration of the patient and severity of the disease This may also be given with Breast milk for those who are unable to swallow the capsules.

Doses.—This chunnam is said to be an **Universal Remedy for all Diseases.** This is the reason why it is otherwise called "**Sarva roganivarana or Sarvanoi Sankara Kadikara-Mercury Chunnam**". Pyrexia Sannipatham, Vayu, Kapha diseases sit or Convulions, Moorchai, Vadhorogam, cerebral thrombos is or Haemorrhage, Hempilegia Leprosy, and Cancer etc., are cured. It is worths while giving 1 or 2 doses of this chunnam in the beginning of the teratment of all diseases as a rule, to prevent complications and hasten recovery. This is a **Traditional Process** offered by a **Sanyasi** or **Koshayee** and not found in books in the manner explained herein. This does not produce Mercurialism.

(2) In the bottom chattey the burnt up medicinal kugai and cover (not the salt mass) may be collected separate, powdered and preserved in a bottle. This is more or less a chenduram which may be administered in 1 to 2 grains does in capsule or other suitable anupanam for the same complaints as in the case of "**Sarvanoi Sankara Kadikara Mercury Chunnam**".

அத்தியாயம் 33

நீர்ச் சுருக்கு

(நீர்க்கடுப்பு, மூத்திரக்கிரிச்சரம்)

பரிகாரம்

இந்நோய் எக்காரணங்கொண்டு உற்பத்தியானதோ அதனை நீக்க வேண்டும். வெப்பத்தை உண்டாக்கக்கூடிய பொருள்களை உண்ணல் கூடா. வெயிலில் திரிதல் கூடா. கள், சாராயம் உட்கொள்ளல் கூடா. நெருப்பினிடம் உட்கார்ந்

திருத்தல் கூடா. வெள்ளை நோயிருந்தால் அதனைப் பரிகரிக்க வேண்டும். அளவு கடந்த கல்வி கூடா. இதற்குரிய பரிகாரம் சித்த மருத்துவத்தில் தனித்து கூறப்படவில்லை. எனது அனுபவ முறைகளை இங்கு கூறுகிறேன்.

1. "கனி புளியின் கொட்டைத்தோல்
கடுவிளநீர் சேர்த்தரைத்து
பனியில் வைத்துண்ண நீர்க்கடுப்பறும்"— ஏடு

(இதன் பொருள்)

புளியம்பழத்திலுள்ள முற்றிய புளியங்கொட்டை மேல் தோலை மட்டும் சேகரித்து இளநீர் விட்டரைத்து இளநீரில் கலக்கி இரவு பனியில் வைத்திருந்து காலை, மாலை, சாப்பிட்டு வர–நீர்க்கடுப்பு, சொட்டு மூத்திரம், நீர் எரிச்சல் இவை தீரும்.

2. வேறு "புளிக்கொட்டை தின்று விடிற்
போகுமே நீர்க்கடுப்பு
அளிச்சேர்க்குழன் மாதரன்பு"

(குணவாகடம்)

(இதன் பொருள்)

நீர்க்கடுப்புள்ளபோது புளியின் கொட்டையை வாயிலிட்டு மென்று தின்ன உடனே நிற்கும்.

(வெண்ப..)

3. "படிகாரங் கற்கண்டு பார்நெல்லி வற்றல்
இடித்துச் சமனீர் கழஞ்சியக்–குடிமோரில்
விட்டகலும் வெள்ளை விரும்பாச்சுருக்கு நீ—
ரிட்டெரிச்சலில்லை யியம்பு"—(கண்ணுசாமியம்)

(இதன் பொருள்)

படிகாரம், கற்கண்டு, நெல்லிவற்றல் இவைகளைச் சமனெடையாக இடித்துச் சூரணஞ் செய்து கலக்கி வேளைக்கு இருகழஞ்சு வீதம் காலை, மாலை மோருடன் சாப்பிட மூன்று நாளில் வெள்ளை, நீர்ச்சுருக்கு, எரிச்சல் இவை நிவர்த்தியாகும் ஒருக்கால் இதனை சாப்பிடும்போது இருமல் ஏற்படின் பசுவின் பால் கறந்தவுடன் நுரையுடன் சாப்பிடவும்

4. கல்நார், கற்பூரசிலாசத்து, கல்மதம், கல்நண்டு இவைகளின் பற்பம் சமனெடை எடுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை 2 சிற்றிகையளவு இளநீரில் கொடுத்து வரக் குணமாகும்.

5. நீர்க்கடுப்பு நிவாரணி என்ற புளியங்கொட்டைத்தோல் சூரணம் கற்பூரசிலாசத்து பற்பம் குங்கிலய பற்பம், பலகறை பற்பம் சிருங்கி பற்பம் இவைகளை சமன் கலந்து காலை, மாலை 2 சிற்றிகையளவு இளநீரில் கொடுக்க இந்நோய் குணமாகும்.

6. மலம் கழிவதற்கு வெள்ளை எண்ணெய் 1/2 அவுன்சு காலையில் கொடுக்கலாம்.

7. தித்திப்பு பேதி மெழுகு அல்லது சுகவிரேசன லேகியம் தக்கயளவில் காலை, மாலை கொடுக்கலாம். (Preparations see below).

பத்தியம்: - காரம் நீக்கி ஆகாரம் கொடுக்கவும். பால் மோர் பழங்கள் சேர்க்கலாம்.

குறிப்பு:— தீக்குற்றமிகுதியைத் தன்னிலைப்படுத்துவதே குறிக்கோளாகக் கொண்டு பரிகாரம் புரிதல் வேண்டும்.

8. Karpuru silaasathu Parpam, Kungilya Parpam, Padika Parpam, Neerkaduppu Nivarani powder and Nannari Verppatti churnam in proper doses are mixed to-gether given with Ilaneer morning and evening with excellent result.

9. வெள்ளை எண்ணெய் (செய்முறை) சுத்தி செய்த இரச கற்பூரம்-ஒரு விராகனெடை ஏலரிசிக் சூரணம்-ஒரு விராகனெடை சிற்றாமணக்கெண்ணெய்-ஒரு ஆழாக்கு.

செய்பாகம்: பூரத்தைக் கல்வத்திட்டு நன்றாய்ப் பொடித்து அத்துடன் ஏலரிசிப் பொடியையும் சேர்த்து நன்றயரைத்து உறவாகியவுடன் சிறிது சிறிதாக சிற்றாமணக்கெண்ணெயைக் கூட்டி நன்றாய் அரைத்தெடுக்கவும்.

அளவு:— எண்ணெயை நன்றாய்க் கலக்கி 1/2 அவுன்சு வீதம் காலையில் மட்டுமே தேகவன்மைக்குத் தக்கவாறு 1 முதல் 3 நாட்கள் கொடுக்கலாம். பேதியாகும்.

சிறுவர்களுக்கு வயதுக்கு ஏற்றவாறு ஒரு தேக்கரண்டி யளவு காலையில் மட்டும் கொடுக்கவும். மோரும் சோறும் கொடுக்கலாம்.

N.B.—சிலர் இதில் சுக்கு சூரணம், வாய்விடங்கம், பறங்கிப் பட்டை இவற்றின் சூரணங்களுடன் கூட்டி அரைக்கிறார்கள். இவை தேவையில்லை என்பது எனது அனுபவம்.

பிணி நீக்கம்: வெள்ளை, வெட்டை, கிரந்தி, புண், புரைகள், வயிற்றுள் அழலை, குன்மம், சூலை நோய் முதலிய எல்லா நோய்களிலும் இந்த எண்ணெய் பயன்படும். நன்றாய்ப் பேதியாகும். கிருமிக்கு முதல் நாள் Worms powder கொடுத்து மறு நாள் இந்த எண்ணெய்யைப் பேதிக்குக் கொடுக்கலாம். (Very popular purgative oil).

10. சதாவரி நெய்: ஒரு தேக்கரண்டியளவு கொடுக்க நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீர்க்குத்து, வெள்ளை இவை குணமாகும். (For preparation refer to chapter 37).

11. மலம் கழிவதற்கும் நோய் தீருவதற்கும் "மேக நாதத் தைலம்" 1/4 முதல் ஒரு அவுன்சு வீதம் காலையில் மட்டும் 1 முதல் மூன்று நாட்கள் கொடுக்கலாம். (Preparation refer to S. V. Thirattu)

12. THITHTHIPPU KEDHI MELUGU OR SWEET LAXATIVE.

(S. R. Pharma)

1. Rasthali Plantain fruits Nos. 2.
2. Kachchur fruits (Dates)—2 palams.
3. Drashai dried (Angoor)—2 palams.
4. Cheena karkandu powder—2 palams.
5. Vadamparuppu—2 palams (To be kept an water for one houri and the outer skin is peeled off.)
6. Pure honey—2 palams.
7. Cow's ghee—2 palams.
8. Chukku churnam—1 palam
9. Milaku churnam—1 palam
10. Thippili churnam—1 palam
11. White mustard fried and powdered—1 palam.

All the other ingredents except items 1, 2, 3. 6 and 7 are rubbed together in a kaluvam, then the fruits are added and rubbed. Then the ghee and honey are added little by little and rubbed together nicely into waxy consistency. This is preserved in a jar or dish.

Dose.—Pepper size for children and chundai size for adults may be given only once in the morning or at bed time in capsule or with sugar. Even twice a day this sweet laxative may be given if necessary.

Uses.—Good motions are produced. Constipation, colic intestines, Biliousness and intestinal worms are relived. If motions are excessive, Vasambu burnt up char is given with Lime Fruit juice or honey. Buttermilk and rice may be given and motions will stop. This is a very fine healthy laxative in habitual constipation.

13. HEALTHY LAXATIVE LEHIYAM OR SWEET LAXATIVE LEHIYAM No 1.

(S. R. Pharma)

1. Vadamparuppu—5 palams kept immershed in hot. water for one hour its skin is removed, dried and 'powdered in a kalvam
2. Angoor Drakshai—5 palams (its seed and dust are removed).

3. Pereechampazham without seeds—5 palams.

4. Surat Nilavarai leaves churnam, purified in cow's milk by steam bath—5 palams.

5. Karunsivathai—Ver churnam—5 palams purified in cow's milk by steam bath.

6. Pinji-kadukkoi churnam—5 palams (fried a bit with castor oil or cow's ghee and then powdered).

7. Rose Gulkanth—5 palams

8. Cheenakarkandu finely powdered—5 palams.

9. Best Honey—Q. S. or about 1/2 lb to 1 lb.

All the above ingredients are nicely pounded in a stone morta and mixed together including Gulkandu. Finally honey is added mixed well and preserved in a glass jar.

Dose:-1/4 to 1/2 tola may be taken at bed time followed by hot milk or may be given morning and evening in obstinate constipation. Bowels become regular. Pungents shoul be avoided.

Uses:-Bowels move regularly, Good apetite and good digestion are ensured. Habitual constipation is definitely relieved. Patients suffering from piles, fistula and anal fissure including prolapsed rectum are really benefitted very fine and healthy laxative.

மூத்திரக்கிரிச்சர ஹரம் (சதசுலோகம்)

14\. ''அதிமதுரஞ் சிறுநாணலுந் தெற்பையு
மரிய நெருஞ்சில் துரா
யானை நெருஞ்சில் கரும்பொடு சந்தன
மாவதின் நெய் பாலும்
மதியுறு சூரியகாந்தியும் பூசணி
வங்கமதின் பற்பம்
மகிழம்பூ சிறு கீரையு நெல்லியு
மணலியுங்கவு தும்பை
விதியுறு தேற்றான் வித்தொடு முந்திரி
வெள்ளரி யிளநீரும்
வெள்ளறுகுட நீர்முள்ளி பொன்னாங்காணி
மேவிய மரமஞ்சள்

மூதிருறு சிந்திலுமேல முடன்னீர்
முத்தமு நிம்பஞ் சர்க்கரையாவும்
முட்டான் பிரமியது
மூத்திரக்கிரிச்சர ஹரமே''

[இதன் பொருள்]

அதிமதுரம், சிறு நாணல், தெற்பை, நெருஞ்சில், துரா, யானை நெருஞ்சில், கரும்பு, சந்தனம், பசுநெய், பால், சூரியகாந்தி, பூசணி, வங்க பற்பம், மகிழம்பூ, சிறு கீரை, நெல்லி, மணலி, கவுதும்பை, தேற்றான்வித்து, முந்திரி, வெள்ளரி, இளநீர், வெள்ளறுகு, நீர்முள்ளி, பொன்னாங்காணி, மரமஞ்சள், சீந்தில், ஏலம், தண்ணீர் முட்டான், முத்து, வேம்பு, சர்க்கரை பிரமி இவையாவும் மூத்திரக்கிரிச்சர ஹரங்களாம்.

15. கற்பூரசிலாசத்து பற்பம், நண்டுக்கல் பற்பம் கல்மதம், கல்நார் இவை சேர்த்துத் தயாரித்த பற்பம், வெடியுப்புச் சுண்ணம், வெங்காரச் சுண்ணம், படிகாரம், வெங்காரம் இவற்றின் பற்பம், சலமஞ்சரி, உலோகமண்டூரச் செந்தூரம், சித்த மண்டூரம், குங்கில்ய பற்பம், மண்டூரச் செந்தூரம், வெள்ளி, முத்து, பவளம், சிருங்கி முதலிய பற்பங்கள் இவற்றிலேதேனுமொன்று அல்லது பலவற்றைக் கலந்து நீர்முள்ளி, நெருஞ்சி, சுரைக்கொடி, முள்ளங்கி, சிறுகீரை வேர், செம்மணத் தக்காளி, வெள்ளரி விரை, நெல்லிமுள்ளி இவைகளில் பலவற்றைச் சேர்த்துத் தயாரித்த குடிநீரில் அனுப்பானித்துக் கொடுக்க நீர் தாராளமாயிறங்கும். உபத்திரங்கள் யாவும் நீங்கும்.

16. <u>நீர்ப்பேதி:</u> (Page 29. கண்ணுசாமியம்)

சோம்பு, வாழைச்சருகு சுட்ட சாம்பல், சிறுபீளை, வால் மிளகு, வெள்ளரிவிரை இவை வகைக்கு ஒரு தோலா வீதம் எடுத்துப் பாண்டத்திலிட்டு நீர் அரைநாழி சேர்த்து நாலிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து வீசம் படியளவு குடிநீர் காலை, மாலை கொடுத்துவர நீர்ச்சிறுப்பு, நீரடைப்பு இவை தீரும்.

17. நீர்ச்சுருக்கு, வெள்ளை, வெட்டை, சிறு நீரில் நெய்போல் மிதக்கும் நோய் இவற்றைப் போக்க அனுபவ முறையான ''வித்து வகை லேகியம்'' செய்முறை:—உளுந்து எள், பூனைக்காலிவித்து, நெருஞ்சிவித்து, நீர்முள்ளி வித்து, நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு ஒருபலம் முறைப்படி பொடி செய்து வைத்துக்கொண்டு—தவிட்டு சீனி (பூரா சர்க்கரை)—பலம் பத்து இவற்றை ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு மூவிரல் அளவு காலை, மாலை சாப்பிட்டு வரலாம். அல்லது

மேற்குறிப்பிட்ட சிலியைப் பாகுகாய்ச்சி அதில் மேற்கண்ட பொடிகளைத் தூவிக் கிளறி லேகியமாக்கி நெய் தேன் கலந்து கொட்டைப்பாக்கு அளவு காலை, மாலை உண்டு வர தாது புஷ்டியுமுண்டாகும். மேற்கண்ட சிறு நீர் சம்பந்தப்பட்ட நோய்களும் குணமாகும். இது அனுபவமுறை.

17. நீரிறங்கக் குடிநீர்: (வேறு) கண்ணுப்பீளை சமூலம், சோற்றுக்கற்றாழைச் சருகு, சீரகம், வெள்ளரி விதை இவை வகைக்கு இரண்டு தோலா. நீர் ஒரு நாழி சேர்த்துக் காய்ச்சி நாலிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி காலை, மாலை வீசம்படி அளவு கொடுத்துவர சிறு நீர் தாராளமாயிறங்கும்.

18. நீரிறங்கக் குடிநீரும் பற்பமும்: (ஏடு) வெள்ளரி விதை ஒரு சிரங்கையை இளவறுப்பாய் வறுத்து-அத்துடன் சிறு கீரை வேர், சிறு நெருஞ்சி வேர் இவை வகைக்கு ஒரு பலம் வீதம் சேர்த்து நீர் நாழிவிட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி காலை, மாலை வீசம்படியளவில் அடியிற் கண்ட சிறு கீரைச்சமூலம் சேர்த்து வறுத்த சீனாக்கார பற்பம் (படிகார பற்பம் Special), சிருங்கி பற்பம், கல்நண்டு பற்பம், கல்நார் பற்பம், கல்மதம் பற்பம் இவற்றை எல்லாம் தகுந்த அளவில் சேர்த்துக் கொடுத்துவர நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, நீர்க்கடுப்பு, நீரருகல் இவை குணமாகும்.

19. நீரிறங்க வேறு முறை:—(வாழைக் கிழங்கு நீர்) மொந்தன் வாழைக்காய் வெட்டியவுடன் அடிக்கிழங்கில் வட்டமாகத் துளைத்து மாலை நேரத்தில் கலயம்போல் கரண்டியால் துளைத்து சதையை நீக்கி வாழையிலையால் இரவில் மூடிவைத்து அதிகாலையில் உள்ளிருக்கும் நீரைக் கரண்டியால் எடுத்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

இந்நீருடன் மேலே கூறிய வெள்ளரி விதையும் மற்றும் சரக்குகள் சேர்த்துச் செய்த குடிநீரையும் கலந்து அதில் மேற்கூறிய படிகார பற்பம் முதலிய பற்பங்களையும் தக்க யளவில் கலந்து முன்போல் காலை, மாலை கொடுத்துவர எப்பேர்ப்பட்ட நீரடைப்பு, நீர்ச்சிறுப்புகளும் தீரும்.

20. நீரிறங்க பரிகாரம் : (வேறு - வாழைத் தண்டு பொடி) வெட்டிய வாழை மரத்தை உரித்து நடு இளந்தண்டு எடுத்து வில்லையாக நருக்கி ஒரு பானையில் எருமை மோரில் வெடியுப்பு பலம் 2, கறியுப்பு பலம் 2 தூள்செய்து போட்டு மேற்கண்ட வில்லைகளையும் அத்துடன் சேர்த்து மூடியிட்டு சீலைமண் செய்து பூமிக்குள் புதைத்து (பூமி பந்தனம்) ஒரு மண்டலம் சென்று எடுத்து வாயகன்ற புட்டியில் (Classical) வில்லைகளை மட்டும் எடுத்து வைத்துக்கொள்ளவம்.

Uses:— நீரடைப்பு கல்லடைப்பு, நீர்ச்சிறுப்பு முதலிய நோய்களில் 1 முதல் 2 வில்லைகளை காலை, மாலை சாப்பிட்டு வரக் குணமாம். பத்தியம்:—மிளகாய் அறவே நீக்கவும்.

21. நீர்க்கடுப்பு இருப்பின்:—(1) சித்தீஞ்சின் குருத்து கொண்டுவந்து தக்க அளவில் ஆவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும். (2) அல்லது உப்பிலிவேர் அரைத்து பாலில் கலந்து கொடுக்கவும். (3) அல்லது ஆலந்துளிரும், அரசந்துளிரும், வீழித்துளிரும் சமம் சேர்த்துப் பாலில் அரைத்து தக்கயளவில் பாலில் கலக்கிக் கொடுக்கவும். (4) அல்லது பருத்திக்காயை மோரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். நீர்க்கடுப்பு நீரடைப்பு தீரும். (5) ஆவாரம் பூவிலுள்ள அரிசியைக் கொண்டுவந்து நற்சீரகம் கூட்டியரைத்து எருமைத் தயிரில் மூன்று நாள் கொள்ள நீர்க்கடுப்பு தீரும். (6) ''கனி புளியின் கொட்டைத் தோல் கடுவிளநீர் சேர்த்தரைத்து பனியில் வைத்துண்ண நீர்க்கடுப்புயறும்'' (குணவாகடம்). (7) ''புளியின் கொட்டைமென்றோதுக்க நீர்க் கடுப்பு நீரெரிச்சல் போம்'' இதன்படி நாம் அறிவது யாதெனில் புளியின் கொட்டைத் தோல் நீர்க்கடுப்புக்கு சிறந்த மருந்தாகும்.

21. நீர் இரத்தமாக இறங்கினால்:—குப்பைமேனி வேர் முக்கழஞ்சு அரைத்து நீரில் கரைத்துக் கொடுக்கவும், கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வேறு : அகத்தியா வாலைரச மெழுகு—குன்றி எடை பனை வெல்லத்தில் பெ திந்து காலை, மாலை முழுங்கச் செய்து இளநீரும் அனுபானம கக் குடிக்கச்செய்யவும். இம்மாதிரி 3 1/2 நாள் 7 வேளை கொடுக்க இரத்த மூத்திரம் (குருதி நீர் குணமாகும். எப்பேர்ப்பட்ட குருதி நீராக இருந்தாலும் நிச்சயம் குணமாகும். வாய் பிடிக்கின் மருந்தை நிறுத்தி அதற்குரிய பரிகாரம் செய்யவும். அதனால் கவலை வேண்டாம்.

வேறு—தாளிசபத்திரி 6 பாகம், திரிகடுகு 4 பாகம், ஏலரிசி 5 பாகம், இலவங்கம் 5 பாகம், பூரா சக்கரை-12 பாகம் இவற்றைத் தூள் செய்து ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டு 1/2 முதல் ஒரு தேக்கரண்டியளவு இளநீர் தேன் அல்லது வேறு தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுத்துவர - நாவரட்சி, பித்தாதிக்கம், நீர்க்கடுப்பு, ரத்த மூத்திரம் (குருதி நீர்) இவை குணமாகும் (குணவாகடம்).

22. நீரடைப்புக்கு பரிகாரம்: (வேறு) காசுக்கட்டியும் பருந்திப்பிலியும் வகைக்கு ஒரு புளியின் கொட்டையளவு எடுத்து அரைத்து, நண்டு சூப்பு வைத்து அதில் கலந்து குடிக்க ஒரே வேளையில் நீரடைப்பு தீரும். பிறகு அதே இரண்டு மருந்துகளையும் (காசுக்கட்டியும் திப்பிலியும்) அரைத்து வாழைப்பழத்தில் அனுபானித்துக் கொடுத்து வெந்நீர் குடிக்கச் செய்யவும். முற்றிலும் குணமாகும்.

23. தீராத வெள்ளை, நீர்க்கடுப்பு இவற்றிற்கு படிகாரச் சூரணம் கலவை—படிகாரம் பொரித்துப் பொடித்தது, சீனாக்கற்கண்டு பொடித்தது, உலர்ந்த நெல்லிக்காயின் மேல் தோல் பொடித்து வத்திரகாயஞ் செய்தது (நெல்லிவற்றல் சூரணம்) இவை மூன்று சரக்குகளையும் சம அளவெடுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு இரண்டு விராகனெடை வீதம் ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை சிறிது பசு மோரில் கலந்து சாப்பிடவும். இதே போல் ஏழு நாட்கள் சாப்பிட் வெள்ளை வெட்டை, நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் முதலியன குணமாகும்.

குறிப்பு—ஒருக்கால் இதனைச் சாப்பிடும்போது இருமல் ஏற்படின் மருந்தை நிறுத்தி பசுவின் பால் கறந்தவுடன் நுரையுடன் சாப்பிடவும். இருமல் நின்று போம் (ஏடு-கண்ணுசாமியம்)

24. நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டை, நீர்ச் சுருக்கு இவற்றிற்கு—"கருடக்கல் பற்பம்" (ஏட்டுப்பிரதி) கருடகல்லை சிறு துண்டுகளாக்கி ஆவின் பாலில் போட்டு வேக வைத்து வற்றியவுடன் சுத்தமாகக் கழுவி எடுத்து யானை அறுகுவேர் ஒரு வீசை கொண்டு வந்து அரைத்து அதற்குள் பொதிந்து சீலைமண் செய்து உலர்த்தி கனபுடம் போட்டெடுக்கப் பற்பமாகும். அளவு.—1 முதல் 2 குன்றி எடை பசு வெண்ணெய் அல்லது வேறு அனுபானங்களில் காலை மாலை கொடுத்துவர மேற்கூறிய நோய்கள் குணமாகும்.

25. நீர்க்கடுப்பு நோயை ஒரே வேளை மருந்தில் குணப்படுத்த ஏற்ற அனுபானம் கீழே காணவும்:—ஆவரம்பூவில் விரியாத மொட்டுகளிலிருக்கும் அதிலுள்ள அரிசி ஒரு தோலா நற்சீரகம் 1/2 தோலா, சந்தனத்தூள் 1/4 தோலா, சர்க்கரை 1/8 தோலா, எலுமிச்சம்பழம் 2. மேற்கண்ட சரக்குகளை எலுமிச்சம்பழத்தைச் பிழிந்த சாறு விட்டு அரைத்து அதில் இரண்டு குன்றி எடை கருடக்கல் பற்பம் சேர்த்துக் குழைத்து காலையில் ஒரே வேளை கொடுக்க ஆச்சரியமாக நீர்க்கடுப்பு உடனே நிவர்த்தியாகும்.

அத்தியாயம் 34

நீர்க்கட்டு

Suppression of Urine—நீரடங்கல்

பரிகாரம்.

பெரும்பாலும் முக்குற்ற காரணங்கள் கல்லடைப்பு நோய், நீர் சுருங்கல் நோய் இவைகளுக்குரியது போலவே நீர்க்கட்டு நோய்க்கும் உள்ளபடியால் பரிகார முறையிலும் அவைகளைப்போலவே இந்நோயையும் பாவிக்க வேண்டும். இந்நோய் பலான காரணங்களாலுண்டாகும். நோய் உண்டாவதற்குரிய காரணம் அறிந்து அவற்றைப் போக்க பரிகாரம் செய்தல் வேண்டும். நீர்க்குண்டிக்காயிலுண்டாம் கற்கள்

காரணமாக இருந்தால் பிறவியிலேயே நீர்ப்புழை அடைபட்டிருந்தால் புழையில் கட்டி, கழலை ஏற்பட்டிருந்தால், நீர்ப்புழைகளில் குருதி கட்டியிருந்தால், நீர்ப்புழை அடிபட்டு நசுங்குதல், நாட்பட்ட நீரழிவு நோய் இவற்றின் காரணமாக இந்நோய் உண்டாயிருந்தால் அதனைக்கவனித்து அதற்குரிய பரிகாரங்களைச் செய்தல் வேண்டும். நீர்க்குண்டிக்காய் அழல் குற்றத்தாலும், ஐயப்பெருக்காலும் தாபிதமடைந்து அதன் இயற்கைத் தொழிலை இழத்தல் காரணமாக இருந்தால் கேடடைந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்த மருந்துகள், உணவுகள் கொடுத்தல் வேண்டும். நஞ்சு கொள்வதனாலேற் பட்டால் அல்லது வாந்தி பேதி, வியர்த்தல் ஆகிய காரணங் களால் நீர்க்கட்டு உண்டானால் அதற்குரிய பரிகாரங்களையும் செய்தல் வேண்டும்.

வியர்வை பிடித்து உடலின் நீர்ப்பகுதியை வெளியாக்க— (1) நொச்சி, மஞ்சள், நெருஞ்சில் இவை வகைக்கு சமம் கூட்டி முறைப்படி குடிநீராக்கி, சிவக்கக் காய்ச்சிய செங் கல்லை அந்நீரிலிட்டு ஆவி பிடிக்கவும். (2) இடுப்பை மட்டும் வெந்நீரில் உட்கார வைத்தல் நல்லது. (3) இடுப்பின் பின் பக்கம் தவிடு வறுத்து ஒற்றிடமிடலாம். இவற்றால் நீர் சுரந்து நீரழியும். (4) வாந்தி பேதிகளாலேற்பட்ட நீர்க் கட்டுகளை அந்நோய்களுக்கேற்ற மருத்துவம் புரிந்து குண மாக்க வேண்டும். (5) நீரைப் பெருக்கக்கூடிய மருந்துகளும் கொடுக்கவும். (6) கை கால் சில்லிட்டிருப்பின் கொள்ளும், கற்பூரமும் கூட்டி உடம்பில் தேய்த்தோ அல்லது தவிடு ஒற்றிடமிடலாம். (7) நீரை உடைத்து வெளியாக்குவதற்கு காசினிவிரை, வெள்ளரிவிரை, நெருஞ்சிமுள், முள்ளங்கி விரை இவை சமயளவெடுத்து முறைப்படி குடிநீராக்கி ஆழாக்கு வீதம் காலை மாலை கொடுக்கலாம். அல்லது (8) கொடி வேலி வேர்ப்பட்டை, ஏலம், தாமரை விரைப் பருப்பு, வெப்பாலையரிசி, வெள்ளை நீர் முள்ளிப்பூ இவை சமயள வெடுத்து முறைப்படி குடிநீரிட்டு 1/2 ஆழாக்கு வீதம் காலை மாலை கொடுக்கலாம்.

செய் மருந்து வகை.

1. <u>வெடியுப்பு செந்தூரம்:—</u> (Re er to chapter 33 கல்லடைப்பு நோய்) இதனை தக்க அளவில் நீரைப் பிரிக்கக் கூடிய குடி நீரில் காலை மாலை கொடுக்க நீர் பெருகி இழியும்.

2. <u>வெடியுப்புச் சுண்ணம்:—</u> (Refer to chapter 33 கல்லடைப்பு நோய்) இதனைத்தக்க அளவில் நீரைப்பிரிக்கக் கூடிய குடிநீரில் காலை, மாலை கொடுக்க நீர் பெருகி இழியும்.

3. <u>குங்கிலிய பற்பம்:—</u>இதில் 2 1/3 முதல் 5 குன்றி எடை காலை, மாலை நீரைப் பிரிக்கக் கூடிய குடி நீரில் கொடுக்க நீர்க்கட்டு தீரும். (Preparation see below)

4. வெண்ணெய் பற்பம் அல்லது நவனீத பற்பம்:— இதில் 1 முதல் 2 அரிசி எடை முன்போல் கொடுக்க அல்லது வால்மிளகுக் குடி நீரில் அனுப்பானித்து காலை மாலை கொடுக்கக் குணமாகும்.

5. முத்து பற்பம்:— (Refer to chapter 33 கல்லடைப்பு நோய்) இதனை தக்க அளவில் காலை மாலை நீரைப் பிரிக்கக் கூடிய குடி நீரில் கொடுக்க நீரிறங்கும்.

6. ரச பற்பம். சண்ட ரச பற்பம்:— (Re er to chapter 33 கல்லடைப்பு நோய்) நோய் அதிகமாக முற்றியிருக்கும் போது இதனை தக்க அளவில் தக்க அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

7. முப்பிணி தொடரின்:—கண்கலிக்கம், மூக்குப் பொடி (ஆக்கிராணம்) இவை வழங்குவதோடு முப்பிணி மருந்துகளாகிய பைரவக் குளிகைகளையும் மற்றும் பெரு மருந்துகளையும் கையாள வேண்டும்.

உணவு—பொரிக்கஞ்சி பார்லியரிசிக்கஞ்சி, இரு முறை வடித்த சோற்றைக் கடைந்தெடுத்த கஞ்சி, அத்துடன் சோம்பு நெருஞ்சில் கூட்டிக் காய்ச்சி வடித்துக் கொடுத்தல் நன்று. மிகுந்த காரம், புளிப்பு, உப்பு சேர்ந்த உணவுகள் ஆகா.

இதுவரைக்கும் சித்த மருத்துவம் கூறினவற்றைச் சொல்லி வந்தோம். இனி இதற்கு மேல் வேறு பரிகாரங்கள் உண்டா என்பதைக் கவனிப்போம். (1) முன்னே கூறியபடி நீர்க்கட்டுக்கு காரணம் எதுவென ஆராய்ந்து அதனை நீக்குதல் வேண்டும். (2) நீரடைப்பு நோயில கூறிய பரிகாரங்கள் யாவும் நீர்க்கட்டு நோயிலும் பிரயோகிக்கலாம். நன்மை பயக்கும்.

வேறு மருந்துகளாவன :

1. வங்கரச குரு பற்பம்:—No. 1and2 (Refer to chapter 33. கல்லடைப்பு நோய்) இதனை தக்க அளவில் அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு தீரும்.

2. மன்மத சிந்தாமணி பற்பம் :—(Refer to chapter 38 நீரடைப்பு நோய்) இதனை தக்க அளவில் தக்க அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு தீரும்.

3. படிகவீரம்:—(Refer to chapter 38 நீரடைப்பு நோய்) இதனை தக்கயளவில் அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நோய் தீரும்.

4. படிகபூரம்:—(Refer to chapter 38 நீரடைப்பு நோய்) இதனைத் தக்கயளவில் அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு நீங்கும்.

5. யானைத்தந்த பற்பம்:—(Refer to chapter 3 கல்லடைப்பு நோய்) இதனை தக்க அளவில் அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டுபோம்.

6. திருவங்க பற்பம்:—(Refer to chapter 31 எருவாய் முளைநோய்) இதனை தக்க அளவில் அனுபானித்து காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டுபோம்.

7. லவண வாழைக்குழி நீர்:—(Refer to chapter 33 கல்லடைப்பு நோய்) இதனை நூலில் கூறிய முறைப்படி தயாரித்து காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு போம்.

8. வித்துவகை லேகியம்:—(Refer to chapter 38 நீரடைப்பு நோய்) இதனை நூலில் கூறியபடி தயாரித்துக் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு நீங்கும்.

9. அதிகயளவில் நோய் மீறியிருக்குமானால்:—ரச பற்பம், சண்டரச பற்பம், சாதிலிங்க பற்பம், செயரச பற்பம் இவைகளிலொன்றை 1/2 முதல் 1 அரிசி எடை காலை, மாலை மூன்று நாள் பனை வெல்லத்தில் பொதிந்து முழுங்கச் செய்து நீரைப் பிரிக்கக்கூடிய குடிநீர் கொடுக்க இந்நோய் குணமாகும். அன்றியும் ரசக்கட்டு பூரக்கட்டு, லிங்கக்கட்டு, தாளகக்கட்டு வீரக்கட்டு இவைகளில் ஒன்றை முலைப்பால், தேன் இவற்றில் இழைத்துக் கொடுக்கக் குணமாகும். சந்நி தோடம் நீங்கும்.

10. மகாவான மெழுகு, கனகலிங்க மெழுகு, மார்க் கண்டன் மெழுகு:—இவற்றிலொன்றை உளுந்து எடை பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை கொடுத்து நீரைப் பிரிக்கக்கூடிய குடிநீர் கொடுக்க இந்நோய் குணமாகும்.

11. இரச மெழுகு:—ஒரு குன்றி எடை காலை, மாலை பனை வெல்லத்தில் பொதிந்து மூன்று நாட்கள் கொடுத்து இளநீர் சாப்பிட்டுவர நீர்க்கட்டு, நீரில் குருதிவரல் இவை குணமாகும். (Preparation refer to சி. வயி. திரட்டு)

12. வாழைச்சருகு உப்பு plus வெடியுப்புக்கட்டு:—(Refer to chapter 33 கல்லடைப்பு நோய்). இதனை தக்க யளவில் அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நீர்க்கட்டு நோயையும் தீர்க்கும்.

13. வச்சிராங்கிப்பால் எண்ணெய்:—இதில் 1/2 முதல் ஒரு தேக்கரண்டியளவு காலையில் ஒரு வேளை கொடுக்க மலடைப்பு நீரடைப்புயிரண்டும் தீரும்.

செய்முறை:—(யூகி வாதவயித்திய விளக்கம் 200 ஏட்டுப் பிரதி)-(மேற்கோள்)-பேதி எண்ணெய்:—

"வழுக்கான எண்ணெய் படிவச்சிராங்கிப் பால்விட்டு
வகையாய்க் காய்ச்சி
நழுக்கான சிறு கரண்டி நலமாகக் கொண்டிடவே
நாடிக்கேளு
கொழுக்கான இருமலப்பேர் கொண்டு நின்றமலமடைப்புச்
சலமும் போகும்
மழைக்காலமிருட்டிலுந்தான் மந்தியுமே கொம்பிழக்கா
வாறுதானே.

(இதன் பொருள்)

சிற்றாமணக்கெண்ணெய் ஒரு படியுடன் சதுரக் கள்ளிப் பால் இரண்டு ஆழாக்கு சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு முன் சொன்னபடி ஒரே வேளை கொடுக்க பேதியுமாகும். நீரடைப்பு, சதையடைப்பு, நீர்க் கட்டும் போம்.

N. B. சிற்றாமணக்கெண்ணெயும் சதுரக் கள்ளிப்பாலும் சம எடை சேர்த்துக் காய்ச்சவும் செய்யலாம்.

14. நீர்க்கட்டுக்கு வெங்கார பற்பம்:—வெங்காரத்தை நன்றாய்ப் பொரித்து 2 முதல் 4 சிற்றிகை விதம் காலை, மாலை வாயிலிட்டு வெந்நீர் குடிக்க நீரடைப்பு, நீர்க்கட்டு, மல மடைப்பு எல்லாந் தீரும். (Preparation refer to chapter 38 நீரடைப்பு நோய்.)

15. படிகார பற்பம் :—இதில் 1 முதல் 2 குன்றி எடை பசுவெண்ணெயில் கொடுத்து நீரைப் பிரிக்கும் குடிநீர் ஏதேனும் கொடுத்துவர நீர்க்கட்டு தீரும். தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்கலாம்.

குறிப்பு:—இந்தப் படிகார பற்பம் ரச பற்பங்களாலேற்படுத்தும் துர்க்குணங்களைப் போக்கும். வாய்ப் புண், மற்றும் வயிறு, குடல் இவற்றின் அழலையையும் போக்கும். (Preparation see below)

1. NAVANEETHA BASPAM

(S. R. Pharma)

Secure a big kuduvai, place in it about one pound cow's butter in the midst of the butter place the following 3 ingredients, well mixed:-

1. Padikaram (raw)-3 palams powdered.
2. Pavala baspam or chunnam No. 2-1½ palams
3. Sringi baspam—1½ palams

These may be mixed or even rubbed with the butter and placed in the kuduvai,

Kuduvai is covered with a lid, seelaiman seven 7 layears are made, dried and is subjected to muzhaputam. On being cooled, the baspam is secured, powdered, weighed and bottled up. It is pure white.

Dose:-2 to 5 grains may be given twice a day with cow's butter or Valmilaku kudineer.

Uses:-Stomatitis, Merculialism, Ushnathickam, Gonorrhoea and its complications, retention of urine etc are cured.

Note:-It is better to prepare this baspam in the proportion of 3:1:1 or 15:5:5 tolas respectively for one pound cow's butter.

2. KUNGILYA CHURNAM OR PARPAM

(S. R. Pharma)

1. White Kunggiliyam finely powdered 5 palams is taken

2. Ilaneer (tender coconut water) No. 6 to 8 Ilaneer may be added to the Kungilyam in a vessel and boiled until the water is almost reduced. This is then dried in the Sun.

3. This process of adding tender coconut water, boiling and drying in the sun is repeatedly done 2 or 3 times more. Final Kungilyam churnam is powdered and bottled up. This may it also be called kungilya parpam.

Does:-5 to 10 grains may be given with cow's butter or ghee or honey or other soothing Diuretic herbal juices or decoctions.

Uses:-Inflammation of the buccal mucus membrance and gastro intestinal tract, Kidney lesions, burning micturition and burning of the body and extremities are cured, Gonorrhoea and Leucorrhoea are well responded to.

3. PADIKARA BASPAM No. 1

(S. R. Pharma)

Purified Padikaram 5 ounces. White of eggs No. 10. These are rubb d well in a kalvam into a fine paste for about 12 hours Villai is made. enclosed in a pair of suitable agals, seven layers of clayi cloth are made to margin, dried and in subjected to putam n a pit in an airtight compartment with about 100 Viratties Invaria le this becomes a fine parpam in the first putam itself. If necessary one or two more putams may be repeated as mentioned above by rubbing with white of eggs. It must be white in colour, very fine and light in consistency.

Dose:-2 to 5 grains may be given with cow's butter or ghee or honey or other suitable Diuretic decoctions or herbal juices.

Uses:-Acute and chronic stomatitis, mercurialism, dysentery colitis, suppeession of urine, burning mixturition and Vanthi etc are cured. This is a suitable remedy for mercurialism.

Note:-Some books recommend white of eggs for preparing Vengkara parpam. This is wrong. Vengkaram becomes black and no parpam at all is got by that process, Don't be disappointed.

4. **PADIKARA BASPAM No. II.**

Purified Padikaram 5 ounces. Cow's butter (butter prepared at home, either cow's or buffalow's butter is preferable since Bazaar churned butter is of no use. (It blackens the medicine without material use) Lb. 1/2. These two ingredients are rubbed in a kalvam into a fine paste, transferred to a suitable mud kuduvai or kalayam. (medicine should occupy less than half of the kuduvai), mouth of the kuduvai is covered with an odu or agal, seven layers of clay cloth are made to the junction, dried and is subjected to putam with about 100 vratties in a pit in an airtight compartment. On being cooled the parpam is secured, weighed and bottled up. If however the colour and fineness of the parpam are not satisfactory, this may be rubbed agian with white of eggs. villai may be made, enclosed. in a pair of agals and a second putam is applied as per rules. It now becomes a fine white parpam.

Dose:-Anupanam and uses are the same as that of Padikara baspam No. I, Don't prepare, Vengkara parpam with butter like that of Padikaram. It goes wrong.

5. **MAHA SWARNA VANAMELUGU No. 1 (SPECIAL)**
(S. R. Pharma)

1. Swarnavalai rasa chenduram-one tola
2. K. M. N. Chenduram-one tola
3. Veeram kattu baspam or Aya Veera pathangam or purified veeram-1 tola.
4. Purified Gowripashanam-1/4 tola
5. Purified vellai padanam - 1/4 tola

6. Purakattu baspam or purified Rasakarpooram-one tola
7. Linghakattu chenduram - one tola
8. Abin (if available) - one tola
9. Kantha chenduram - one tola
10. Palingu Shambirani - one tola
11. Karpuram (shudan) - one tola
12. Purified Thalakam - one tola
13. Mirudar singi purified - one tola
14. Gold leaves (or preferably Gold baspam or chenduram) 1/2 tola.
15. Kasthuri best - 1/4 tola
16. Gorojanam - one tola
17. Kungumappu - one tola
18. Pachai karpuram - one tola
19. Silver Baspam - one tola
20. Naipavala baspam - one tola

All these twenty ingredients are powdered. Nos. 10 and 11 are mixed together, rubbed into a paste, then added Nos. 1 to 9, 12 and 13, rubbed well with Andathailam for 2 days, then added Nos. 14 to 20 and rubbed again for a day. When it is of waxy consistency it is bottled up.

Dose:-Black gram size may be given twice a day enclosed in jaggery or sugar or in empty gelatin capsules.

Uses:-Kaphavadha janni, Jwaram, kasam, Kushtam, Hernia Orchitis, Soolai, Vranam, Elai, Sapthathodam, Gunmam, Yaitruvali, Vaitrukaduppu, Amenorrhoea, Sobai Jaundice, Vanthi, Grahani, Fistula, Neeradaippu Kalladaippu, convulsions, Granthi, Sinuses, Kandamala Diabetes, Mellitas, Polyurea, Bronchial asthma, General

debility, Paralysis, Hemiplegia, Impotency and Nervous debility etc, are cured.

Note:-1. The above Vanamelugu 10 grs is taken, added Amukara churnam Compound No. 11-10 grains, Elarisi churnam plain 10 grains and milaku churnam 10 grains placed in a kalvam, rubbed with Honey S. Q. and made again into a waxy consistency. This is done to give a pleasant flavour to the medicine. Does of this is about 2 to 4 grains twice a day. This is called Maha swarna Vanamamelugu No. II for practical purpose. This may be administered enclosed in capsules or in sugar.

Note:-2, Gowri and vellai pashpam may be taken only 1/4 tola each well purified drugs. Better to administer this mezhugu with interval or rest and in small doses.

6. MARKANDAN OR PARANJOTHI MELUGU

(S. R. Pharma)

1. Purified Patharasam - 1 ounce
2. Purified Thalakam - 1 ounce
3. Purified Jathilingam - 1 ounce
4. Purified Chendakam - 2 ounces

These four ingredients are powdered in a kalvam, mixed together as per rules, then rubbed with Pooneer jalam (which should be original No. I obtained at the proper season) for 72 hours or even more, and when it is of waxy consistency, the mezhugu is secured and preserved in a dish.

Note:-In my attempt original Puneer jalam No. I was not available and as such my preparation was not tolerated by the patients owing to the use of ordinary puneer jalam. I then stopped it and converted this mezhugu into a kuppi-erippu chenduram under Valukam which is named Rasa chenduram No. 5.

RASACHENDURAM NO. V IS NOTED HERE BELOW :

This chenduram works splendidly well in all cases mentioned below.

Dose:-If the mezhugu had been properly prepared and finished; the dose should be 2 to 4 grains given morning and evening enclosed in palm jaggery or empty gelatin capsules.

Use:-Janni, kasam, vadham, Soolai, Gunmam, Leprosy. Cancer, other worst skin diseases, granthi, fistiula, piles. Tubercular glands, **Buboe**, Cancer in the genital parts in woemn and men, Meganoi, Sobai, Chilvisham, Vranam, Allergic Dermatitis (தடிப்பு) Carbuncles and Breast absecess Stricture urethra etc are readily responded to.

அத்தியாயம் 35

சொட்டு நீர்
(In continence of urine சொட்டு மூத்திரம்)

பரிகாரம்

குழந்தைகளில் இந்நோயுண்டாவதற்குரிய காரணங்களை யும், பெரியவர்களில் இந்நோயுண்டாவதற்குரிய காரணங்களை யும், அதில் காணும் குறிகுணங்களையும் சித்த மருத்துவத்தில் விவரமாகக் கூறியுள்ளார். அந்தந்தக் காரணத்தையும், குறி குணங்களையும். குற்ற வேறுபாடுகளையும் நன்றாய் ஆராய்ந்தறிந்து நீர் நோய்களில் கூறிய மருந்து வகைகளைக் கொடுத்தல் நலமென சித்த மருத்துவம் கூறுகிறது. குழந்தை களில் குடற்புழு, நீர்க்கணை, இளைப்பு நோய், நீரருகல், நீர் பெருகல் இந்நோய்கள் சொட்டு நீருக்குக் காரணமாயிருந் தால் அந்தந்த நோய்களுக்கேற்ற பரிகாரம் புரிவதின்மூலம் சொட்டு மூத்திரம் குணமாகும். நீர்ப்புழை பிறவிலேயே சரியாக அமையாதிருந்தால் அது பற்றி மருந்துகளைக் கொண்டு இதில் பரிகாரம் செய்வதற்கில்லை.

பெரியவர்களில் அடிக்கடி நீர் வெளிப்படுதல் போன்ற உணர்ச்சி (Irritable bladder) அதாவது நீர்ப்பை, நீர்த் தாரை இவற்றில் வெட்டை சம்பந்தமான புண்ணியிருப்பின் இந்த மாதிரி உணர்ச்சி உண்டாகக்கூடும். அதனைப் போக்கு வதற்கு மருத்துவம் செய்தல் வேண்டும். இருமல், சிரித்தல், அழுதல், பயப்படல் ஆகியவற்றால் சொட்டு நீர் ஏற்பட்டால் அக்காரணங்களை ஒழித்தல் வேண்டும். நீர் பெருக்கல், நீரருகல், வெள்ளை, நீர்ப்பை தாபிதம், நரம்புத் தளர்ச்சி, பாரிசவாயு, பகந்திரம், கீழ்நோக்குங்காலின் செயல் குறைதல், ஆகிய இவற்றால் சொட்டு நீர் ஏற்படின் அக்காரணங்களை எல்லாம் நிவர்த்திப்பது மருத்துவனின் கடமையாகும். சித்த மருத்து வத்தில் சொட்டு நீர் நோய்க்கு தனியாக மருத்துவம் கூற வில்லை.

மற்ற நூல்களில் ஏட்டுப் பிரதியில் கூறியுள்ளதை இங்கு கூற விரும்புகிறேன்.

1. குழந்தைகளில் இந்நோயுண்டானால் படுக்கைக்குக் கீழே சிறிது புழுங்கலரிசியை இரவில் பரப்பி வைத்திருந்து காலையில் நீரில் நனைந்த அரிசியை அரைத்து அடைதட்டிச் சுட்டுக் கொடுக்கவும். இப்படியாக மூன்று முதல் ஐந்து நாள் கொடுக்க சொட்டு மூத்திரம், இரவு படுக்கையில் பெய்யும் மூத்திரம் இவை குணமாகும்.

2. பெரியவர்களில் காணும் இந்நோய்க்கு மகாவான மெழுகு, சொர்ணவாலை சீன ரச செந்தூரம், சொர்ணலிங்கம் மெழுகு, மார்க்கண்டன் மெழுகு, கனகலிங்க மெழுகு, தாளகங் கெந்தி சொர்ண செந்தூரம், இவற்றிலேதேனு மொன்றை தக்கயளவில், தக்க அனுப்பானத்தில் காலை, மாலை கொடுக்க நோய் நீங்கும். (Recipies see below)

N B:-மகாவான மெழுகு:—(Refer to chapter 34 for preparation and its use)

1. சொர்ண வாலைரச சீனச் செந்தூரம்:—(செய்முறை) வாதவயித்திய விளக்கம் 200-ஏட்டுப் பிரதி.

''வாலைரசம் தங்கமெடு வடிவான சீனமெடை வகையாய் சேர்த்துச்
சாலைபட அரைத்து எரிசட்டியடி நின்றிடுங்காண் சரியாயுண்டால்
காலைபடும் குட்டரணம் காரிழையார் மேகவகைகாணாதோடுங்

Dose:-1 to 2 pills may be taken twice a day with milk or Orange juice or tender coconut water.

Uses:-Gonorrhoea, Leucorrhoea, gleet, all urinary diseases, Dysentery and diarrhoea are cured.

31. GONO LEUCO CURE PILL No. II (Special)

(S. R. Pharma)

1. Thiruvanga chunnam No. 1 or No. II or Pavalavangam No. 1 or No. II - 4 tolas.
2. Mirudar Singi Baspam - 4 tolas
3. Karpura Silajathu Baspam - 4 tolas
4. Annabedhi Chenduram - 4 tolas
5. Kantha Avaraiver chenduram or Kantha chenduram No.1-4 tolas.
6. Nagasangu baspam or Naga baspam No. II - 4 tolas
7. Kungilya churnam - 4 tolas
8. Leuco diet No. I - 20 tolas
9. Padikara churnam compound - 20 tolas

All the ingredients are mixed together rubbed with (1) Lime Fruit Juice, dried. again rubbed with (2) Protrilaikaiyan juice dried, and with (3) Vellarugu juice for one day in each, made into pills of 5 grs. each, dried in the shade and bottled up.

Dose:-1 to 2 pills may be taken twice a day with milk or orange juice or Ilaneer.

Uses:-Are the same as that of Gono Leuco cure Pill No. 1. This pill is very beneficial in Leucorrhoea.

32. GONO-LEUCO CURE PILL No. 3

(Special)

(S. R. Pharma)

1. Thiruvanga chunnam No. 3 - 4 tolas
2. Mirudar Singi Baspam - 4 tolas
3. Karpura Silajathu baspam - 8 tolas
4. Annabedai chenduram - 8 tolas
5. Seemai kalnor baspam - 4 tolas
6. Kantha chenduram No. II - 4 tolas
7. Naga sangu baspam - 4 tolas
8. Kungilya churnam - 4 tolas
9. Leuco diet I-40 tolas
10. Padikara churnam Co. 20 - tolas
11. Sangu baspam No. 2 - 4 tolas

All these eleven ingredients have been mixed together, rubbed, with (1) Lime fruit juice for 2 days, dried again, rubbed with (2) Potrilaikaiyan juice for 2 days, dried and (3) then Vellarugu, juice for two days in each, made into pills of 5 grains each dried in the shade and bottled up.

Dose and uses:-Are the same as that of Gono-Leuco Cure Pills Nos. I and II. This is a promissing remedy in Leucorrhoea.

அத்தியாயம் 37.

நீரடைப்பு நோய்.

(நீர்க்குண்டிக்காய் தாபித நோய்—Nephrits)

பரிகாரம்

இந்நோய் உணவு செயலாதி காரணங்களால் கீழ்வாய்க் கனலை எழுப்பி கீழ்நோக்குங்காலைத் தூண்டச் செய்து தீக்குற்றத்தைக் கேடடையச் செய்யும். மற்றக்குற்றங்களும் தூண்டப்பட்டு நோய்ப் பெருகும். சில சமயம் குளிர்காற்று ஈரம் முதலிய காரணங்களால் ஐயம் பெருகியும் இந்நோய் வருவதுண்டு. தீக்குற்ற மிகுதியால் குருதியும் உடல் வன்மையும் கெடும். ஐயம் மிகுதியால் உடல் வீக்கமும் வலி மிகுதியால் வயிறு ஊதல் உண்டாகும். சிறுநீர் அளவில் குறைந்து குருதி கூடிக் கருத்து எடையில் குறையும். எருவானது இருகியும் சில வேளை இளகியும் காணும். ஆதலால் மருத்துவன் செய்ய வேண்டியது யாதெனில் குற்றமடைந்த தீக் குற்றத்தையும், கீழ்நோக்குங்காலையும் தன்னிலைப்படுத்தி சிறுநீர் எளிதில் வெளியாகக்கூடிய மருந்துகளைக் கையாள வேண்டும். (சி. ம.)

சித்த மருத்துவத்தில் கூறிய பரிகாரங்களாவன:—கழிச்சலுக்கும் நீர்ப்பிரிவதற்கும் மருந்துகளாவன.—

1. நீர்முள்ளி, நெருஞ்சி, சுரைக்கொடி, சோம்பு, சரக்கொன்றைப்புளி, கடுக்காய், தான்றி, நெல்லி இவை சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு 1/2 முதல் ஒரு ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கவும்.

2. வேறு:—காக்கணம் வேர், முட்காவேளை வேர், சிறுபீளை வேர், மூக்கிரட்டை வேர், வெட்டி வேர், விலாமிச்சு வேர், வில்வ வேர் இவை சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு 1/2 முதல் ஒரு ஆழாக்கு வீதம் எடுத்து அதில் குங்கில்யம் ஒரு சிட்டிகை பொடித்துக் கலந்து காலை, மாலை கொடுக்கவும்.

3. வேறு:—கற்றாழை வேர், நீர்க்கடம்பின் வேர், மிளகுக் கொடி, வெள்ளைச்சாரணை வேர் பொடுதலைக்கீரை, கீழ்க்காய், நெல்லி இவை சம எடை கூட்டி முறைப்படி குடிநீராக்கி 1/2 முதல் 3/4 ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கவும்.

4. வேறு:—மண்டூராதி அடைக்குடிநீர்:—இரும்புக்கிட்டம் பலம். இரண்டு. நெருஞ்சில், வெள்ளரி விதை, பற்பாடகம், சிவதைவேர், சுரைக்கொடி, காசினி விரை, நன்னாரி இவை

வகைக்கு பலம் ஒன்று, கள் படி 1, காடி நீர் படி 1, பசுநீர் படி 1 முறைப்படி குடிநீரிட்டு 1/2 ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கலாம். இக்குடிநீருள்ள பானையைச் சிறு தீயில் வைத்திருக்கவும். இதனை அண்டக்குடி நீர், பாண்டக்குடிநீர் எனவும் கூறுவர்.

5. வெள்ளறுகு, பிரமதண்டி, நீர்ப்பிரமி, வல்லாரை பொடுதலை, நீர்க்கடம்பு, கீழ்காய்நெல்லி, சகதேவி, நெய்ச்சிட்டி இவைகளிலேதேனுமொன்றை அரைத்து எலுமிச்சங்காயளவு உருட்டி மோர் அல்லது இளநீரில் கலக்கி காலை, மாலை மூன்று நாள் கொடுக்க நீரடைப்பு குணமாகும்.

எண்ணெய் வகை :

1. மேகநாத எண்ணெய்:— பூவரசம்பட்டை, கற்றாழை, பிரமதண்டி, வெள்ளறுகு, கோவை இலை, வெள்ளை வெங்காயம் இவை வகைக்கு சாறு படி ஒன்று. சிற்றாமணக்கெண்ணெய் ஒரு படி இவற்றை ஒன்றாய்த் தைலங் காய்ச்சும் சட்டியில் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடிக்கவும். வடிகடத்தில் முன்னதாகவே பூரம் ஒரு பலம் பொடித்துப் போட்டும், கற்பூர சிலாசத்து பற்பம் பலம் ஒன்று, கல்நார் பற்பம் பலம் ஒன்றும் கூட்டிக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதில் ½ முதல் ஒரு அவுன்சு வீதம் காலையில் மட்டும் கொடுக்க மலம் கழியும், நீரும் பெருகி இழியும்.

2. வேறு: சகதேவி நெய்:— அதிமதுரம், சந்தனம், நன்னாரி வேர், வெட்டி வேர், விலாமிச்சுவேர், திப்பிலிவேர் கிராம்பு, கடுகுரோகிணி, நெய்தற்கிழங்கு, இவை வகைக்கு ஒரு விராகனிடை, சகதேவியிலைச்சாறு ½ படியில் கலக்கச் சரக்குகளை அரைத்துக்கலக்கி பசு நெய் 1/2 படி கூட்டிக் காய்ச்சி வடிக்கவும். இதில் உச்சிக் கரண்டியளவு காலை, மாலை உள்ளுக்கும் கொடுத்து தலையில் தேய்த்து முழுகவும் உபயோகிக்கலாம்.

நெய் வகை:-

1. தண்ணீர் விட்டான் கிழங்கு நெய்:- இதில் உச்சிக் கரண்டி வீதம் காலை மாலை 1/2 முதல் ஒரு மண்டலம் கொடுக்க குழந்தைகள் தேகம் கொழுமை பெற்று நல்ல அழகும், ஒளியும் பெறும் என்பர். (சிகிச்சாரத்னதீபம்)-ஆதமரட்சாமிர்தமெனனும் நூலில் கூறியுள்ள முறைப்படி சதாவேரி நெய்யைத் தயாரித்து காலை, மாலை ஒரு உச்சிக் கரண்டி வீதம் கொடுத்துவர மூத்திரக்கிரிச்சரம், நீர்க்கடுப்பு, நீர்க்குத்து, எலும்புருக்கி, மேகசுரம், கை, காலெறிவு நீங்கும் தேகபுஷ்டி, தாதுவிருத்தி யுண்டாகுமென்கிறார்.

செய்முறை:— சதாவேரிக் கிழங்குச்சாறு படி 12 குழிமீட்டான் கிழங்கு சாறு, நெல்லிக்காய்சாறு, பெரும்பூசணி

காய்ச்சாறு, கரும்புச்சாறு, இவை வகைக்கு படி ஒன்று, ஆவி நெய் படி 4, இவற்றை ஒன்றாய்க் கலந்து திரிகடுகு, திரிபலை வெட்பாலையரிசி, கொத்தமல்லி, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், விலாமிச்சம்வேர், அதிமதுரம், கூகைநீர், முந்திரிகை, பேரீந்து, இந்துப்பு, ஓமம், கோரைக் கிழங்கு, சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனம் இவை வகைக்கு கழுஞ்சு 3—அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர முன்சொன்ன நோய்கள் குணமாகும்.

2. வல்லாரை நெய்:—இதில் ஒரு பொட்டுக்கரண்டியளவு காலை, மாலை கொடுத்து வர தொந்த மாந்தம், போர் மாந்தம், மேகம், காசம், நாட்பட்டஈளை, இரைப்பு, மூலக் கணம், உட்சுரம், வாந்தி, இருமல், சுவாசசுரம் இவைகள் தீரும். மான்கொம்பற்பம் கூட்டிக் கொடுக்கலாம். நீரடைப்பு நோயிலும் கொடுக்கலாமென சித்தமருத்துவம் கூறுகிறது (சி. வயி. திரட்டு)

2. சீந்தில் நெய்:—இதன் முறையை "சித்தர் உறை விளக்கத்திற்கு" காண்க என்று குணபாடம் முதற்பாகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சீந்தில் கொடியிலிருந்து செய்யப் படும். இதனை நீரடைப்புக்கு மருந்தாகச் சித்தமருத்துவம் கூறுகிறது.

பற்பச் செந்தூரங்கள்:

முத்து, பவளம், சிலாசத்து, கல்நார், வெடியுப்பு, வெண் காரம், சீனாக்காரம், நவச்சாரம் கல்கண்டு, குங்கிலியம் இவற்றின் பற்பம், செந்தூரம், சுண்ணம் இவைகளைத் தனித் தனியாகவேனும் அல்லது சிலவற்றைக் கலந்தேனும் தக்க யளவில் தக்க அனுப்பானத்தில் காலை, மாலை கொடுத்துவர நீரடைப்பு நோய் குணமாகும். (These are very good indication and suggestion).

2. வேறு:—கற்சுண்ணம் 2 1/2 தோலா நீர்படி 3/4 கூட்டிக்கலக்கித் தெளியவைத்து, இந்தத் தெளிவுநீர் 3/4 ஆழாக்கு சிற்றாமணக்கெண்ணெய் 3/4 ஆழாக்கு இவற்றைக் கூட்டிக்குழைத்து, குங்கிலியம் மூன்று கழற்காயளவும் சந் தனத்தைலம் 3 துளியும் கூட்டிக்கலந்து வைத்துக் கொண்டு 1 முதல் 2 தேக்கரண்டியளவு காலை, மாலை கொடுக்க மலமும் நீரும் ஒழுங்காகும். மூத்திரக்கிரிச்சரம் குணமாகும்.

உணவு :-

காரம், புளிப்பு நீக்கி எளிதில் செரிக்கக்கூடிய உணவு அருந்தல் வேண்டும். குருவை, கார், மணக்கத்தை இவற்றின்

கைக்குத்தல் அரிசிச் சோறும் வெண்டை பீர்க்கு புடல் வாழைப்பூ, அத்திப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முள்ளங்கி, சிறு கீரை, தாளிக்கீரை, பசலை, வசலை காசினிக்கீரை, வெந்தயக் கீரை, பருப்புக்கீரை, பொன்னாங்கண்ணி இவை போன்ற காய்கறி கீரைகளையும் பன்றிக்கறி, உள்ளான் இவைகளையும் உணவில் சேர்க்கலாம். மீன், நண்டு ஆகா, கொதிநீரில் பனங் கற்கண்டு போட்டுக் குடிக்க நல்ல பலனைத்தரும். காப்பி, தேயிலைத் தண்ணீர் கூடா. பார்லியரிசி வேகவைத்த நீர் சாப்பிடலாம்.

இதுவரைக்கும் சித்த மருத்துவத்தில் கூறியுள்ள பரி காரங்களைச் சொல்லி வந்தோம். இதற்கு மேற்கொண்ட நீரடைப்புக்குரிய பரிகாரங்களைக் கீழே வரைந்துள்ளோம்.

1. மன்மத சிந்தாமணி பற்பம் : (Manuscript) செய் முறை:—(1) கொடிப் பவளம் : எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்தி பிறகு கல்வத்திலிட்டு குமரிச் சாறு விட்டரைத்து வில்லைதட்டி அகலிலிட்டு மூடி சீலைமண் செய்து புடமிட்டெடுத்துக் கொள்ளவும்.

2. கலைமான் கொம்பு:—உளியால் சீவி ஓர் இரவு பசு நெய்யில் ஊறவைத்து, பிறகு சோற்றுக் கற்றாழைக்குள் பொதிந்து புடம்போட்டெடுத்துக் கொள்ளவும்.

3. படிகாரம் ஒரு பலம், ரச கற்பூரம் 1/4 பலம் இவ் விரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடிபண்ணி வெற்றிலைச் சாறு விட்டரைத்து வில்லைதட்டி அகலிலடக்கி மூடிச் சீலை மண்செய்து 25 எருவில் புடமிட்டெடுக்க பொங்கிப் பற்பித் திருக்கும். (N·B):—இந்த படிக பூரபற்பம் 1 முதல் 2 சிற்றிகை சந்தனம் அரைத்த விழுதிலாவது மருதோன்றியிலை யரைத்த விழுதிலாவது அனுப்பானித்து காலை, மாலை கொடுக்க "நீர்ப்பிரமேகம்" குணமாகும்.)

4. கல்நார் பற்பம்:—சீமைக் கல்நாரை எருக்கம்பால் விட்டரைத்து வில்லைதட்டி எருக்கம் வேர்ப்பட்டைக்குள் வைத்து சீலைமண் செய்து புடம்போட்டெடுத்த கல் நார் பற்பம்-ஒரு பலம், கற்பூரசிலாசத்து ஒரு பலம், கல்மதம் ஒரு பலம். இம்மூன்றையும் கூட்டி துளசிச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி ஒரு புடமும்,-குமரிச் சாற்றிலரைத்து ஒரு புடமும் போட்டெடுத்துக்கொள்ளவும். N.B:—இந்தப் பற்பத்தை 1 முதல் 2 சிற்றிகையளவு காலை, மாலை, ஓரிலைத் தாமரை யிலையையரைத்த விழுதிலாவது அல்லது கட்டுக் கொடி. யரைத்த விழுதிலாவது அனுப்பானித்துக் கொடுக்க சீழ் பிரமேகமும் மேக நோய் 20-ம் குணமாகும்.)

5. மேலே கூறிய நாலுவகைப் பற்பங்களும் சம எடை யாக வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து-மருதம் பட்டையைப் பால் விட்டிடித்துப் பிழிந்த சாறு விட்டரைத்து வில்லை தட்டி யுலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டு இதில் 1 முதல் 2 பணவெடை காலை, மாலை-மருதம்பட்டை, மாம்பட்டை, இலுப்பைப்பட்டை இவை சமம் எடுத்து இடித்துப் பிழிந்த சாறு ஒரு ஆழாக்கு அத்துடன் பசுவின் பால் ஒரு ஆழாக்குக் கூட்டியதில் அனுப்பானித்துக் கொடுக்க நீரில் ரத்தம் வருதல் (ரத்த மூத்திரம் Haelmaturea குருதி ரத்தம்) குணமாகும். வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, நீர்க்கடுப்பு, மேக நீர்யாவும் குணமாகும்.

2. வித்து வகை லேகியம்:—செய்முறை :—(Manuscript) உளுத்தமாவு, எள், பூனைக்காலிவித்து, நெருஞ்சிவித்து நீர் முள்ளிவித்து, நிலப்பனைக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு ஒரு பலம் சூரணம், சீனி, பத்துபலம் (White sugar) முறைப்படி சீனியைப் பாகுக்காய்ச்சி மேற்கண்ட சூரணங்களைத்தூவி லேகியம் கிண்டி நெய், தேன் சேர்த்துக் கிண்டி இறக்கவும்.

Dose:—கொட்டைப்பாக்களவு காலை, மாலை கொடுக்க நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, வெள்ளை, வெட்டை சுக்கில நீர் இவை குணமாகும். தாதுபுஷ்டியுண்டாகும்.

3. படிகவீரம்:—சுத்திசெய்த வீரம். 1/2 பலம், படிகாரம் மூன்று பலம் வீரத்தை ஒரேகட்டியாக எடுத்துக் கொள்ளவும். படிகாரத்தை நன்றாய்த்தூள் செய்து பாதியை ஒரு குடுவை யிலிட்டு வீரக்கட்டியை அதன் மீது வைத்து மீண்டும் மறுபாதி படிகாரத்தூளை அதன்மீது போட்டு அழுத்தி மேல் மூடி சீலை மண் செய்து 25 விராட்டியில் புடம் போட்டெடுக்க பொருமிப்பற்பித்திருக்கும். இதில் 1 முதல் 2 சிற்றிகை காலை, மாலை தேனில் கொடுக்க எப்பேர்ப்பட்ட வாந்தியும் நிற்கும். தாகம், நாவறட்சி போம். நீரடைப்பு நீர்க்கடுப்பு இவை குணமாகும்.

4. மேலே No. 1-ல் கூறிய ''படிக பூரபற்பம்'' மேலே கூறிய அனுப்பானத்தில் கொடுக்க நீரடைப்பு தீரும்.

5. நோய் அதிகப்பட்டதாகத் தெரிந்தால்:—ரசபற்பம் நவாச்சாரக்கட்டு, பூரக்கட்டு, லிங்கக்கட்டு, வீரக்கட்டு, ரசக் கட்டு இவைகளிலொன்றை முலைப்பாலில் இழைத்து காலை மாலை நாவில் தடவிவர நல்ல பலன் தரும்.

6. வங்கரச குரு பற்பம் (or சுண்ணம்)—ஒரு கடுகு முதல் குன்றியளவு காலை, மாலை வெண்ணெயில் அல்லது வேறு குடிநீரில் கொடுக்க நீரடைப்பு, சதையடைப்பு இவை நீங்கும். (Preparation under chapter 38)

7. வங்கரசச் சிலாசத்து பற்பம்— No. 11. இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை வெண்ணெய் அல்லது வேறு குடிநீரில் கொடுக்க நீரடைப்பு தீரும். (Preparation under chapter 31) அஸ்தி தந்திமேகம், ஓடுகிற வெட்டை இவையும் குணமாகும்.

8. லவண வாழைக் கிழங்குக் குழி நீர்:—(Refer to (chapter 29) இதனைத் தக்கயளவில் கொடுக்க நீரடைப்பு தீரும்.

9. வாழைச் சருகு உப்பு வெடியுப்பு சுண்ணம்:—Refer to (chapter 31)—முன் கூறியதுபோல் இதனை உபயோகிக்க கல்லடைப்பு, நீரடைப்பு யாவும் குணமாகும்.

10. வெங்காரம்:—வெங்காரத்தை நன்றாய்ப் பொரித்து 2 முதல் 4 சிற்றிகை வீதம் காலை, மாலை வாயிலிட்டு வெந்நீர் கொடுத்துவர நீரடைப்பு. மலமடைப்பு இரண்டும் தீரும். என்கிறார் (ஏட்டுப் பிரதி—யூகிமுனிவாதவயித்தியவிளக்கம்)

''விடுவாதஞ் செய்வோமென்பார் வேதாந்த மார்க்கம்
விரித்துப் பேசும் [போல்
கொடுவாதி வெங்காரங் குணமாகப் பொரித்து வெந்நீர்
கொடுக்க நீர்கள்
நடுவாதி நீரடைப்பு நலமான மலமடைப்பு
மிரண்டு மோடும்.
சுடுவாதி தனக்கு வேறெத்திரநூல் சொன்னாலும்
தோயான் பாரே''.

[இதன் பொருள்]

என்பதினால் மேற்கூறிய பொரித்த வெங்காரம் நீரடைப்புக்கு ஏற்ற மருந்தென அறிகிறோம். இதைப் பார்க்கிலும் ''வெங்காரச் சுண்ணம்'' மிகச் சிறந்த மருந்தாகும். (Refer to chapter 37).

11. **A Compound of Vediuppu chunnam or Venkara chunnam or both, Jalamanjari, Padikara Parpam, Karpura silajathu Parpam and yanaithantha Parpam in equal parts-mixed and bottled up.**

Dose.—2 to 4 pinches for a dose may be given every four to six hours with suitable diuretic decoctions or with tender coconut water. This works splendidly well in retention of urine.

12. கற்பூராதிச் சூரணம்:—(சிகிச்சாரத்ன தீபம் (Part 2) —செய்முறை:—பொரித்த வெண்காரம் 1/2 பலம், நற்சீரகம் ½ பலம், ஆலாத்திக் கற்பூரம் 1/2 பலம். செய்பாகம்— சீரகத்தை நன்றாய் இடித்துச் சூரணித்து அத்துடன் ஆலாத்திக் கற்பூரத்தைச் சேர்த்து அரைத்து ஒரு புது மண் ஓட்டை அடுப்பில் வைத்து கைபொருக்க சூடேற்றி கீழ் இறக்கி இந்த சூரணத்தைப் போட்டு புகையாவண்ணம் புரட்டிப்புரட்டி வறுத்து ஒரு பீங்கான் தட்டில் கொட்டி அதனுடன் பொரித்த வெங்காரத்தைப் போட்டுக் கலந்து கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்து சீசாவில் பத்திரப்படுத்துக.

அளவு:—வேளைக்கு 2 முதல் 4 சிற்றிகை வீதம் காலை, மாலை ஆனை நெருஞ்சிக் குடிநீரில் பத்து நாட்கள் கொடுக்க வெள்ளை நீர்க்கட்டு, துர் மாமிச வளர்ச்சியினாலுண்டான நீரடைப்பு (Stricture urethra) முதலிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு:—ஆனை நெருஞ்சிக் குடிநீர் செய்முறை:—ஆனை நெருஞ்சிசமூலம் ஒருபிடி கொண்டுவந்து நறுக்கிப் போட்டு கால்படி நீர்விட்டு சுண்டக் காய்ச்சி வடி கட்டி எடுத்துக்கொள்க.

அத்தியாயம் 38

II. நீரினைப்பெருக்கல் நோய்கள் அல்லது மேகநீர் இருபது

மேகநீர்

பரிகாரம்

நீரினைப்பெருக்கல் நோய்கள் அல்லது மேகநீர் இருபது என்ற தலைப்பில் நோய்வரும் வழியைக் கவனிக்குமிடத்து உணவாதி செயல்களால் வாயுக்கள் கேடடைந்து (கீழ் நோக்குங் கால், மேல் நோக்குங்கால், பரவுகால்) மிகுந்து மூலக்கனலை எழுப்பி இந்நோய் உண்டாக்குவதாகச் சித்த மருத்துவம் கூறுகிறது. மேக நீர் இருபதையும் முக்குற்றயளவாகப் பிரித்துள்ளார். வளிக்குற்றத்தால் நாலு பிரிவுகளும், அழல் குற்றத்தால் வருவன ஆறு பிரிவுகளும், ஐயக்குற்றத்தால் வருவன பத்து பிரிவுகளும் எனக்கூறப்பட்டிருக்கின்றன. மேக நீர் நோய் இருபதும் ஆரம்பத்தில் அழல் குற்றமிகுதியினால் உடலில் காங்கையை உண்டாக்கி வாயுக்களையும் பெருக்கி அவற்றின் காரணமாக மீண்டும் ஐயக்குற்றமும் வளிக்குற்றமும் கேடடைந்து உடற்றாதுக்கள் தத்தம் தொழிலைச் சரிவர செய்ய வொட்டாது, அவற்றிலுள்ள உடலுருயிக்கு ஆதாரமாகிய சத்துக்களை சிறுநீர் வழியே வெளியாக்கும். முக்குற்றங்களும், ஐந்து பிராணாதி வாயுக்களும், ஏழு

உடற்றாதுக்களுமே இந்நோயில் கேடடைவதாகக்கருத வேண்டும் கேடடையும் முக்குற்றங்கள், வாயுக்கள் உடற்றாதுக்களுக் கேற்ப இந்நோயின் வன்மையும் பொருந்தியிருக்கும். பசித்தீ கெட்டு, உடல் வன்மை குறைந்து பலான தொடர்பு நோய் களுக்கும் இடம் கொடுக்கும்.

குறிப்பு:—மேகநீரிருபதுக்கும் பொதுவாகச் சொன்ன முக் குற்ற இயல்பே தித்திப்பு நீருக்கும் உரித்தாகும்.

இதில் மருத்துவன் கவனிக்க வேண்டியது யாதெனில் மிகுதிப்பட்ட மூலக்கனலைக் குறைத்து கேடடைந்த முக் குற்றங்களையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்துவதே கடமையாகும். உடற்கட்டாகிய ஏழுதாதுக்களும் கேடடை வதால் அவற்றையும் தக்கவாறு வன்மைப்படுத்த முயல வேண்டும். மேக நோய்க்கும் மருத்துவம் புரிதல் வேண்டும்.

அத்தியாயம் 39
நீ ரி ழி வு நோ ய்
(தித்திப்பு நீர்மதுமேகம்)—Diabets Mellitus)

பரிகாரம்

நீரிழிவு நோய்க்கு நம் நாட்டு மருத்துவர் கையாளும் குடி நீர், பொடி, இளகியம், நெய் பற்பம், செந்தூரம், மாத்திரை முதலிய மருந்துகளை சித்தமருத்துவம் கூறியவாறு இங்கு வரையலாயிற்று:—

குடிநீர் வகைகள்:—

1. ''ஆவாரந்துளிர் கல்மதங்கொன்றைவேர்
நீவரைத்துப் புளிமோரிலுண்பையேல்
தீவிரைத்து வரினுந்திரை கடல்
காவிபைந்து வரினுங்கடக்குமே''

[இதன் பொருள்]

ஆவரைத்துளிர், கல்மதம், கொன்றைவேர் இம்மூன்றை யும் ஒன்றுபட அரைத்து மோரில் கலக்கிக்குடிக்க நீரிழிவு நீங்கும். தினம் காலை, மாலை இருவேலை சாப்பிட்டு வரலாம்

2. வேறு: ''ஆவிரை கொன்றை நாவல் அலைகடல்
முத்தம் கோட்டம்
மேவியமருதந்தோலும் விரைந்து
னொன்றாய்க்கொண்டு
பூவிரிகுழலினாளே பொருந்தவே தன்னை
யுண்ணக்
காவிரி நீரும் வற்றிக் கடல் நீரும்
வற்றுந் தானே

[இதன் பொருள்]

ஆவிரையின் இலை, வேர், பூ, பட்டை, காய், இவைகளைச் சேர்த்து ஒரு பலம், கொன்றைவேர், நாவற்கொட்டை கடலழிஞ்சில், கோரைக்கிழங்கு, கோட்டம், மருதம்பட்டை இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒன்று பட இடித்து எட்டுப் பங்கு நீர் விட்டு எட்டிலொன்றாய் வற்றவைத்து அரை ஆழாக்கு வீதம் காலை, மாலை சாப்பிட்டுவர நீரழிவு போம். அடிக்கடி இழியும் நீர்ப்பிணி நீங்கும்.

3. வேறு:—தேற்றான் விதை, கடுக்காய்த்தோல், ஆவாரைவித்து, விளாம்பிசின் இவை வகைக்கு 1/4 பலம் வீதம் எடுத்து முதல் நாள் இரவில் சிறிது மோரில் ஊரவைத்து மறு நாள் காலை அரைத்து பசுவின் மோரில் கலந்து காலை, மாலை சாப்பிட்டுவர் நீரிழிவு நீங்கும்.

4. வேறு: ''வெள்ளையுடன் மாறாநீர் மேகம்
போந்தேகமிசை
யுள்ள பல பிணியுமோடுமே-யுள்ள
பொலாங்ககலு நீர்முள்ளிப்பூ மகரத்
தோடே
இலாங்கலியின் வட்டயிலையில்
(தே. வெ. 405)

[இதன் பொருள்]

நீர்முள்ளிப்பூவினை அதன் மகரத்தோடு எடுத்துத் தெங்கின் வட்டும் கூட்டிக் காலை, மாலை மென்று தின்ன நீரிழிவு வெள்ளை இவை போம்.

5. வேறு:—''திருந்துவிளாவாவாரை செப்பு
வரட்பூலாவேர்
விருந்திற்லிலவங்கைக் காட்டுமல்லிகை
யுங்கூட்டிப்
பொருந்தவே மேதி மோரிற் போதவே
வேகவைத்து
அருந்திடத்தயிரில் வார்த்தேயதீத
நீரழிவு போமே.

[இதன் பொருள்]

விளாவேர், ஆவரைவேர், பூலாவேர், இலவங்கம் காட்டு மில்லிவேர், இவைகளை ஓரளவாக எடுத்து எருமை மோரில் வேகவைத்து வடித்து அம்மோர் சிறிது கூட்டி காலை மாலை குடிக்க நீரிழிவு நீங்கும்.

பொடி சூரண வகைகள்

1. <u>சிலந்தில் பொடி</u>:—இதில் மூவிரல் அளவு காலை, மாலை தேனில் கொள்ள நீரிழிவும், கைகாலலெரிச்சல் வாய் குமட்டல் முதலியன போம். (Page 399-சி. ம.

2. நாவல் பொடி:—இதில் ஒரு சிற்றிகையளவு காலை, மாலை தேனில் கொள்ள நீரிழிவும், நீர் எரிச்சலும் போம். (Page 399-சி.ம.)

3. சந்தனப் பொடி:—இதில் சிற்றிகையளவு காலை மாலை தேனில் கொள்ள நாவறட்சி தாகம், வாய்குமட்டல் இவை குணமாகும் (Page 399-சி.ம.)

இளகியங்கள்.

இலவங்க லேகியம் (தேரையர் எமகம்), வில்வாதி லேகியம், தேற்றான்கொட்டை லேகியம் (சி. வயி. திரட்டு), சேங்கொட்டை லேகியம் (see below) இவைகளிலொன்றை தக்கயளவில் காலை, மாலை கொடுத்துவர நீரிழிவு குணமாகுமென சித்தமருத்துவம் கூறுகிறது.

உணவு

உடற் றாதுக்கள் ஏழும் வன்மையடையத் தக்கதாக உணவை அளவிட்டுக் கொடுத்தல் வேண்டும். சிறுநீரைப் பெருக்கக்கூடிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அளவோடு நீரை இறங்கச் செய்யும் பொருள்களை உண்ணல் வேண்டும். செரிப்புத் தன்மை நன்றாயிருக்கும் பொழுது, கோதுமை, சம்பா கோதுமை, கேழ்வரகு ஆகியவைகளைச் சமையல் செய்து உண்ணலாம். ஆட்டுக்கறி, காடை, கவுதாரி, புறா, கோழி இவற்றின் மாமிசம், காய் கறிகளில் கத்தரிப் பிஞ்சு, அவரை பிஞ்சு, அத்திப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, இவைகளும் நெய் பால், தயிர், மோர் ஆகிய இவைகளும் உணவில் சேர்க்கலாம்.

சிறுநீர் எரிச்சலிருக்கும்போது வெண்டைப் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, புடலம் பிஞ்சு இவற்றை உபயோகிக்கலாம். கழிச்சல் உள்ளபோது சுண்டைக்காய், அத்தி இளம்பிஞ்சு' மாம்பருப்பு இவை போன்றனவும்; நீர் அளவு கடந்தும், எரு (மலம்) சிக்கலானபோதும், தாளிக்கீரை, அறுகீரை, முருங்கைக்கீரை முருங்கைப் பூ, ஆவாரம் பூ போன்றனவும் கொள்ளலாம். பெருங் கழிச்சலிருப்பின் இரு முறை வடித்த அரிசிக் கஞ்சி. வால் கோதுமையை அரைத்து, நீரில் கலக்கிக் காய்ச்சிய கஞ்சி அவ்வாறே செய்த வாதுமைப் பருப்புக் கஞ்சி இவற்றில் சிறிது பால் கூட்டிக் கொடுத்தல் வேண்டும்.

தேரர் மருத்துப் பாரதமென்னும் நூலில் மதுமேக நோய் உண்டாவதற்கு மூலகாரணமான மேக நோய்க்குக் கீசகனையும், நீரிழிவு நோயாகிய மதுமேக நோய்க்குச் சயிந்தவனையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

எங்ஙனம் பீமனால் கீசகனும், தருமன், அர்ச்சுனன், கண்ணன், பீமன், நகுலன், சகாதேவன் இவர்களால் சயிந்த

வனும் கொல்லப்பட்டனரோ அங்ஙனமே பீமனாகிற இரசத்தினால் மேகநோயையும், தருமன் முதலியவராகிற அயம் எஃகு, வெள்ளி, கெந்தி, பொன், காரீயம், செம்பு இவற்றால் செய்யப்பட்ட பற்பச் செந்தூரங்களினால் நீரிழிவு நோயையும் போக்குதல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உருவகப் படுத்திக் கூறிய கதையை ''மருத்துப் பாரதமென்னும் நூலிலிருந்து மேற்கோள்களை சித்த மருத்துவத்தில் பக்கம் 400—403-ல் கூறியுள்ளார்.

கதைச் சுருக்கம்

கீசகன் பாஞ்சாலியை இச்சித்தது. ஆணும் பெண்ணும் இச்சித்துக் கூடியதால் பிறந்த மேக நோய் எனக்கொண்டு, அம் மேகத்தால் பிறந்த நீரிழிவு நோயைப் போக்க முதல் முதல் கெந்தகமும், பிறகு இரசமும்—அதாவது கெந்தகம், இரசம் இவற்றால் தயாரித்த மருந்துகளைக் கொடுத்து, மேக நோயைப் போக்கியும், அதன் காரணமாக (மேக நோய்)ப் பிறந்த நீரிழிவுக்கு (ஒப்பிட்ட சயிந்தவனுக்கு) துணை நோய்களாகிய ஐயப் பிணிகளைத் தொலைக்கும் பொருட்டு, பொன்பற்பம், செந்தூரங்கள் வழங்கி உடல் வன்மைப் பெறச் செய்து, கருவங்கம் வழங்கி அதற்கு அடுத்தாற் போல் செம்பு வழங்கல் வேண்டும் என்கிறார்.

குறிப்பு:—கதையில் சயிந்தவனுக்கு க்கொன்றை மாலையிட்டது கொடுக்கும் மருந்திற்குக் கொன்றைப்பூச்சாறு துணை மருந்தாகக் கொள்ளவேண்டுமென்கிறார்.

2. அர்ச்சுனன் சிவன் அளித்த பாசுபதாஸ்திரம் கைக்கொண்டான் என்பது ''பாசுபதாஸ் திரமாத்திரை''யைக் குறிக்குமென்கிறார் நூல் எழுதிய பேராசிரியர்.

மருத்துவப் பாரதத்தில் கூறிய மருத்துவம்:

இந்நோயில் கெடுதியடைந்த உடற்றாதுக்களை ஒவ்வொன்றாய் வன்மைப்படுத்த முதலில் இரசதாதுக்காக கெந்தகத்தாலாகிய கெந்தக பற்பம், கெந்தகச் செந்தூரம் கெந்தகரசாயணம், கெந்தகசுடர்த்தைலம் இவைகளிலொன்றை தக்கயளவில் தக்க துணைமருந்துகளுடன் காலை, மாலை கொடுத்து வரல் வேண்டும்.

குருதியைப் பெருக்குவதற்கு:—இரும்பு, எஃகு இவற்றால் தயாரித்த பற்பச் செந்தூரங்களை நாவற்பட்டைச் சாறு அல்லது ஆவிரைப்பஞ்சாங்கக் குடிநீருடன் காலை, மாலை கொடுத்து வரலாம். ஊன் பெருகவும் உடலில் மேகத்தாலுண்டான அழலைக் [illegible] போக்கவும்—வெள்ளி பற்பம், செந்தூரம் ஏதேனுமொன்றை நீர்முள்ளிப்பூ, மணத்தக்காளி வித்து இவைகளைப் 'போன்ற' நீரின் எரிச்சலையும் போக்கக்

கூடிய குடிநீர், சூரணம், நெய், இளகியம் இவைகளிலொன்றைத் துணைமருந்துகளோடு கொடுக்கலாம். கொழுப்பை பெருக்கவும் என்பைவன்மைபடுத்தவும் பொன்னாலாகிய பற்பம், செந்தூரம், மாத்திரைகள், இவற்றை தக்க துணை மருந்துகளோடு கொடுக்கலாம். உடலின் வன்மை மிகுந்து மேனி சிவந்து காணினும் இதுவரை செய்த மருத்துவத்தை இஃதோடு விட்டுவிடின் பயன்அற்றதாகிவிடும். ஆதலின் மூளையையும் தவளத்தையும் பெருக்குமாறு காரீயம், செம்பு இவைகளாலான மருந்துகளில் காரீய மருந்து ஒன்றை தக்க துணை மருந்துகளோடு சில தினங்களுக்கு காலை, மாலை கொடுத்த பின் செம்பாலாகிய மருந்தை வழங்கின் நோய் முற்றிலும் போம் என்பது தேரன் துணிபு என சித்த மருத்துவம் கூறலாயிற்று. மேலும் ''ஈயம் செம்புக்கு அரசன்" என்னும் பழமொழிக்கிணங்க செம்பின் பற்பச் செந்தூரங்களை வழங்கும் போதுண்டாகும் கெடுதிகளை வராமல் தடுத்துக்காக்க ஈயத்தாலாகிய மருந்தினையும் துணை கூட்டினாரெனக் கொள்ளல் வேண்டும்.

N. B.—இவ்விரண்டு வகை மருந்துகளும் (ஈயம், செம்பு) உயர் தரமாக நல்ல முறையில் அமைந்திருந்தால் மட்டும் மேக நீர் நோயாகிய நீரிழிவு நோயையும் அதனாலேற்படும் துன்பங்களையும் குணப்படுத்தும். யாதொரு கெடுதியும் உண்டாகமாட்டாது. அஃதின்றி செய்முறை சரியில்லையானால் நோயும் குணமாக இயலாது. மருந்துகளால் மேற்கெடுதிகள் உண்டாகு மென்பதை எக்காலமும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் இது என் அபிப்ராயமும் எச்சரிக்கையுமாகும்.

நீரிழிவு நோயில் நாவறட்சி, நீர் வேட்கை, கழிச்சல் உடல் எரிச்சல், மயக்கம், விக்கல். இவை போன்ற பல வகைப்பட்ட குறி குணங்கள் தொடருமாகலின் அவ்வப்போது எழும் குறிகுணங்களைத் தடுத்தற்கான மருந்துகளைத் தனித்தேனும் நோய்க்குரிய மருந்துடன் சேர்த்தேனும் கொடுக்கலாம்.

N. B.—நீரிழிவு நோய் அடங்கினால் தான் மற்றத் தொடர்பு நோய்களும் குணமாகும் என்பது என் கருத்து. ஆதலால் நீரிழிவு நோய் எந்நிலையிலிருப்பதென்பதை ஆராய்ந்தறிந்து அதனைத் தணிக்கும் மார்க்கத்தைச் சரியானபடி கடைப்பிடிப்பதன் மூலம் மற்றத் துணை நோய்களும் எளிதில் வசப்படுமென்றறிக/நோயின் நிலைமைக் கேற்றவாறு உணவுகளையும் கொடுத்துவர வேண்டும்.

இதுவரைக்கும் சித்த மருத்துவத்தில் கூறிய பரிகார முறைகளைச் சொல்லிவந்தோம். இதற்குமேல் இதர நூல்களிலும் என் அனுபவத்திலுமிருந்து வருகிற பரிகாரமுறைகளைக் கூறுகிறேன்.

1. ஆவாரைக் குடிநீர்: நாவல் பட்டை, மருதம் பட்டை கோரைக் கிழங்கு, கடுக்காய், தான்றி, நெல்லி வற்றல், கட்டுக், கொடி, போஸ்தக்காய்த் தோல், கடலழிஞ்சிப் பட்டை ஆவரைப் பூ, ஆவாரைப் பட்டை, ஆவாரை வேர்ப்பட்டை. செய்பாகம்:—இப் பன்னிரண்டு சரக்குகளும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து இடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு வேண்டும்போது ஒரு தோலா சூரணத்தை கால்படி நீரில் போட்டு, அரைக்கால்படியாகச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு வடித்துச் சாப்பிடவும். இப்படி தினம் இரு வேளையாக பத்து நாட்கள் சாப்பிட மதுமேகம் அதனாலுண்டான அதிக தாகம், நீர் போக்கு, அழலை இவை நீங்கும். கீழ்க்கண்ட அப்பிரேக் செந்தூரமும் இதனுடன் உட்கொள்ளல் சாலச் சிறந்தது (சி. வை. சிந்தாமணி)

2. அப்பிரகச் செந்தூரம்:—ஆவின் நீரும், வெள்ளாட்டு நீரும் ஒன்றாய்க் கலந்து வாயகண்ட பாண்டத்திலிட்டு அதில் கிருஷ்ண அப்பிரகத்தைக் கன்னான் கொல்லுலையில் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சித் தேய்த்து, பின்னர் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் இடித்து நெல்லுடன் கலந்து அவித்து ஒரு முரட்டுத் துணியில் தளர்ச்சியாக முடிச்சுகட்டி காடிவிட்டுப் பிசைந்து மறுநாள் தெளிவை யிறுத்துப் பார்க்க அடியில் அப்பிரகம் உறைந்திருக்கும். இதனை நவநீதம் என்பர். இப்படி முடிவு பெற்றதைக் கல்வத்திலிட்டு இலை நடுவே சிவப்புக்கோடு விழுந்திருக்கும் நறுந்தாளிக்கீரையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அரைக்கவும். இப்படி இரண்டு சாமம் அரைத்து இலேசான வில்லையாகத் தட்டி உலர்த்தி ஓட்டில் பரப்பி மேலோடு மூடிச் சீலைமண் செய்து கெஜபுடமிடவும். இம்மாதிரியாக மொத்தம் பத்து புடங்கள் போட்டெடுக்கவும் ஒவ்வொரு தடவையும் தளிரை சேர்த்து இரண்டு சாமம் அரைக்கவேண்டும். அதன் பிறகு மாம்பட்டை, நாவல்பட்டை, ஒதியம்பட்டை இவை ஒவ்வொன்றின் சாற்றாலாயினும் கியாழத்தாலாயினும் தனித் தனி நான்கு சாமங்கள் வீதம் அரைத்து வில்லைகள் தட்டி முன்போல் புடமிட்டெடுக்க உயர்தரமான செந்தூரமாகும்.

பிரையோகம்:—வேளைக்குக் குன்றி எடை காலை மாலை நெய்யில் கொடுத்துவரின் மேகத்தாலுண்டான நீரிழிவு நோயைக் குணப்படுத்தும். இன்னும் மதுமேகத்தையும் அதனாலுண்டாகும் மேகக்கட்டிகள் போன்ற துன்பங்களையும் குணப்படுத்தும். நீரிலுள்ள இனிப்பு வெகு சீக்கிரத்தில் மாறிவிடும்.

N.B:—இச் செந்தூரத்தைக் கொடுக்கும்போது நீரில் இனிப்பு அதிகமிருப்பின் நாவற்கொட்டை மாத்திரையையும் சிறுநீரின் அளவுமிஞ்சியிருப்பின் (Polyurea) மேற்கூறிய ஆவாரைக்குடி நீரையும் கொடுத்தல் நன்று (வை. சிந்தாமணி கண்ணுசாமி பிள்ளை)

3. நாவற்கொட்டை மாத்திரை:—வேண்டிய அளவு நாவற்கொட்டையைக் கொண்டுவந்து இடித்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு ஆடு தீண்டாப்பாளை இலைச்சாறுவிட்டு 10 நாள்கள் அரைத்து குன்றியளவு மாத்திரைகள் செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு வேளைக்கு 2 அல்லது 3 மாத்திரை வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர 15 நாளில் நீரழிவு நோய் குணமாகும். அதேசமயம் தங்கச்செந்தூரம் அல்லது மேலே கூறிய அப்பிரகச் செந்தூரம் காலை, மாலை சாப்பிடுவது நல்லது. இம்மாத்திரை நீரிலுள்ள இனிப்பைக் குறைத்து மேகக்கட்டிகள் வராமல் தடுக்கும் (க. வை. சிந்தாமணி)

4. தங்கச் செந்தூரம்:—ஒரு விராகனிடை தங்க ரேக்கை சிறுதுண்டுகளாகக் கத்தரித்து கல்வத்திலிட்டு அதனுடன் 4—5 விராகனிடை சுத்தி செய்த ரசத்தை விட்டு அரைக்கவும். தங்கமும் சூதமும் உறவான பின்னர் திரு நீற்றுப்பச்சை என்னும் சப்ஜாயிலையில் 10-12 போட்டு அரைக்க மெழு காகும். பின்னர் வெள்ளைக்காக்கரட்டான் வேர்ப்பட்டை யும் இலையையும் கூட்டி இடித்துப்பிழிந்த சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலடக்கிச் சீலைமண் செய்து உலர்ந்தபின் 20 வறட்டியில் புடமிடவும். மீண்டும் அம்மருந்தைக் கல்வத்திலிட்டு வேறொன்றும் சேர்க் காமல் முன்கூறிய மூலிகைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்து ஓட்டி லடக்கிச் சீலைமண் செய்து உலர்த்தி 20 வறட்டியில் புடமிடவும். இப்படி 4-5 புடங்களில் போட்டெடுக்க நல்ல செந்தூரமாக அமையும். தங்கச் சாய லறும் வரைக்கும் புடம்போட வேண்டும். 4, 5 புடங்களில் தங்கச் சாயலறச் செந்தூரம் பூர்த்தியாகும். மருந்தின் எடையும் சற்று கூடுதலாக யிருக்கும்.

அளவு:—வேளைக்கு 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை நெய், தேன் இவற்றில் கொடுக்க மதுமேகம் குண மாவதுடன் வெகுநாள் நோயினால் உண்டான தேக பல கீனத்தையும் விரைவில் குணமாக்கும் (க. வயி. சிந்தா மணி).

N.B.:—இதனை நான் செய்து அனுபவித்திருக்கிறேன். மிகச் சிறந்த தங்கச் செந்தூரம்.

N.B.:—மேற்கூறிய நான்கு வகை மருந்துக்களும் மதுமே நோய்க்கு மிக மிகச் சிறந்த பரிகாரமாகும்.

5. மதுமேகக் குடி நீர் (வேறு) கண்ணுச்சாமியம்.

1. ''பஞ்சவுகையாவாரம் பாரிற் கடலழிஞ்சி
மிஞ்சமருதம்பட்டை வெண்ணாவல்—கொஞ்சுவித்து
மேற்பட்டை நீர்விட்டான் மேலான பாதிரிவேர்
ஏற்கப் பல மிரண்டாமென்''.

2. ''எஸ்ஸு மரமஞ்சள் ஏற்ற கன்னார் பலமே
நண்ணுங்குரோசாணி நாடக்கால்-மண்ணி
இடித்துத் துகளாக்கியே மூவராகன்
குடிநீராய்க் காய்ச்சியே கொள்''.

3. ''கொள்ளுங்குடி நீரில் கூட்டிச் சிறுமதுரம்
விள்ள விருநேரம் விரும்பிடவே—உள்ள
மதுமேகம் தன்னழலை மட்டில்லாத் தாகம்
பதுங்கிடுமே பேரொழியப் பார்''.

ஆவரைப், பஞ்சகம், கடலழிஞ்சிப்பட்டை வெண்ணாவல் கொட்டை, அதன் பட்டை, தண்ணீர் விட்டான் கிழங்கு, பாதிரிவேர் இவை வகைக்கு பலம் இரண்டு, 'மர மஞ்சள், கல்நார், இவை வகைக்கு பலம் ஒன்று, குரோசாணி ஓமம் பலம் கால். இவைகளை நன்றாயிடித்துச் சூரணஞ் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு மூன்று விராகனெடை கால் படி நீரிற்போட்டு அரைக்காற்படியாக வற்றக் காய்ச்சி வடி கட்டி சிறிது சர்க்கரை சேர்த்து, வேண்டுமாயின் சிறிது பசுவின் பால்விட்டுச் சாப்பிடுக. இப்படி காலை, மாலை ஒரு மண்டலம் சாப்பிட்டு வர மதுமேகம் அதனாலுண்டாகும் அழலை தாகம் நாவறட்சி இவைகள் நீங்கும்.

N.B.:—இக்கியாழம் சாப்பிடுங் காலத்தில் மேக சிந்தாமணிச் செந்தூரம் அல்லது மேலே கூறிய அப்பிரகச்செந்தூரம் தங்கச் செந்தூரம் ஏதேனுமொன்றைத் தக்க அளவில் காலை, மாலை சாப்பிட்டு வருவது நன்மைபயக்கும்.

6. மேக சிந்தாமணிச் செந்தூரம்:—கண்ணுசாமியம்

1. ''தப்பில்லாக் காந்தமுடன் தந்து பிரவாளம்
செப்பு பரிகெந்தி சேருமெடை-ஒப்ப
விருகழஞ்சோடப்பிரகமிஃதுடனே சூதம்
கருதக் கழஞ்சஞ்சு கண்டு''

2. கண்ட விவையாறும் கல்வத்தேயிட்டபின்
தண்டு குமரித்தருஞ் சாற்றைக்-கொண்டு
பதமாயரைத்தபின் பாங்காமதனை
இதமாகக் குப்பியிலே யிட்டு''

3. ''இட்டநற் குப்பியிடுக்கி நடுவாலுகத்தில்
கட்டுறவே நாழிஎட்டு காணவெரி-திட்டமுடன்
ஆறவிட்டுக் கொண்டதனையும் மூலிசாறுகொண்டு
கூறரைப்பு நாட்டக் குறிப்பு.''

4. ''குறித்த மருந்ததனைக்கூற வொருவில்லை
தெறிப்பாகச் செய்துலர்த்தித் தீயில்-நெறியாய்ப்
புடமூன்று போடப்புகழ் பெருஞ்செந்தூரம்
திடப்படுமேகத்திற் காந்தேர்''

5. ''தேருஞ்சிந்தூரம் தெரிவிக்கும் மேகநீர்
நேரும் பலக்குறைவுந் நீரெடுத்துச்-சேரும்
மதுமேகந்தாகம் மருவுமனல் தீரச்
சதுராயுண் குன்றிடையேதான்''

(க-து) காந்தம், பவழம், தங்கம், கெந்தி இவைகள் வகைக்கு கழஞ்சு 2. அப்பிரகச் செந்தூரம், சூதம் வகைக்கு கழஞ்சு 5. இவைகளுள் முதலில் கல்வத்தில் சூதத்துடன் தங்கரேக்கையிட்டு நன்றாயரைத்துச் சூதத்துடன் இலேசித்த சமயம் கெந்தியைச் சேர்த்து அரைக்கக் கறுப்பாகயிருக்கும். பின்னர் மற்றவகைளை ஒன்றன்பின் ஒன்றாய்ச் சேர்த்து குமரிச்சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து கல்வத்தோடே காயவைத்துச் சேதமின்றிச் சுரண்டி எழுசீலை செய்த குப்பியி லிட்டு (மருந்து குப்பியில் பாதி மட்டம் கொள்ளக்கூடிய குப்பியாகயிருக்க வேண்டும்.) குப்பி வாயைப் பலப்பக்கல்லா லடைத்துச் சீலை செய்துலர்த்தி-ஒரு மட்கடத்தில் இரண்டு மூன்று விரற்கடை மணல் கொட்டி, அதன் மீது மருந்திட்ட குப்பியை வைத்து கழுத்தளவு மணல் நிரப்பி மேற்சட்டி மூடிச் சீலைசெய்து அடுப்பேற்றி நான்கு சாமம் முத்தீயாக எரிக்கும்படி கூறப்பட்டிருக்கிறது. இது சரியல்ல. மூன்று நாட்கள் எரிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை எரித்து இரவில் எரிப்பை, நிறுத்தி தணலின்மேல் வைத்திருக்க வேண்டும். முதல் நாள் தீபாக்கினி, கமலாக்கினியாகவும், மறுநாள் கமலாக்கினி காடாக்கினியாகவும், மூன்றாம் நாள் காடாக்கினியாகவும் எரித்து ஆறவிடவேண்டும். இதுவே எனது அனுபவம். ஆறிய பின்னர் குப்பியையுடைத்து உள்ளிருக்கும் மருந்தையெல்லாம் சேதப்படாமல் எடுத்துக் கல்வத்திலிட்டு மீண்டும் குமரிச்சாற்றால் நான்கு சாமம் நன்றாயரைத்து வில்லை செய்து காய வைத்து அகலிலடக்கி மேல்கல்மூடிச் சீலைசெய்து 10-12 எருவில் புடமிடவும். தங்கச் சாயலிருப்பின் இந்த மாதிரி குமரிச் சாறுவிட்டரைத்து இரண்டொரு புடமிட்டுக் கொள்க எங்ஙனமாயினும் மூன்று புடத்தில் செந்தூரம் நன்றாய் அமையும்.

அளவு:—குன்றி எடை காலை, மாலை நெய், வெண்ணெய் முதலிய அனுப்பானங்களில் 10-20 நாள் கொள்ள நீரிலுள்ள இனிப்பு, மேக அழலை, தாகம், வெகுமூத்திரம் பலவீனம் முதலியன குணமாகும்.

பத்தியம்:—நல்ல சத்துடைய ஆகாரங்களை உண்ணவ் வேண்டும். போகம் கூடாது. இந்த மேக சிந்தாமணிச் சிந்தூரத்தில் சேர்க்க வேண்டிய அப்பிரகச் சிந்தூரம் உயர் தரமாக முடிவு பெற்றிருக்க வேண்டுமென்கிறார். அதன் செய்முறையைக் கீழே காணலாம். மருந்துகள் சரியாக முடிவு பெற்றால் பிணிகள் நிச்சயம் குணமாகும்.

7. அப்பிரகச் சிந்தூரம்:—(வேறு) கண்ணுசாமியம்.

''ஐங்கரனடியை யன்பாய்ப் போற்றி
சங்கரன்றன்னைச் சாலாத்துதித்துச்
சீரப்பிரெகச் சிந்தூரங்கேள்
கோரப்பலந்தான் கொள்ளேயெட்டு
பனங்கள்ளதனுட் பதமிடவெண்ணித்
தினமாமைந்து சிறக்க இட்டுக்
கன்னானுலையில் கறுக்காயூதி
நன்றாய்ப்புளித்த நலமாந்தயிரில்
மூன்று நாள் வரையில் மூழ்கப்போட்டு
நான்காம் நாளில் நலம் பெறச் சாக்கில்
முடிச்சுக்கட்டி முன்னீர்விட்டுப்
பிடித்துப் பிசையப் பிறங்குஞ்சத்து
நவநீதந்தான் நனி பெறக்கொண்டு
குவலயந்தன்னில் கொள்ளும் மூலி
ஈருள்ளிச்சாறிட்டே யரைத்துக்
கூறும் வில்லை குறிப்பாய்ப்பலவே
செய்தேயதனைச் செங்கதிரோன்பால்
பையவுலர்த்திப் பண்பாயகலில்
அடக்கஞ்செய்தேயனை மண்ணிட்டுப்
புடமேயிடுவீர் புகல்கஜ எருவில்
மீண்டுங்குமரி மீளுஞ்சாற்றில்
தூண்டு மாலந்துளிராம் விழுது
கொடுத்தர சமுங்கொள்ளுந்தேசி
அடுத்தரசமும் ஆனமஞ்சள்
கரிப்பான் சாறும் கருதிரையமின்
சரிவர புடமே சாற்று முன்போல
தனித்தனிப்போடத் தருநிறஞ் சிவப்பே
இனிதுபயக்கும் இதுவே யுண்மை
குன்றியளவாம் குறிக்கும் நாளே
நன்றிபயக்கும் நாளிருபோது
வாரமுண்ண வருநீர்மேகம்
சாருமதுவும் சத்துவக்கேடும்
தாகமடங்கும் நடமுஞ்சண்டமர்
பாகமிதுவே பத்தியமில்லை
இப்படி மும்முறையேற்று நாளில்
செப்பும் நோய்கள் தீர்ந்திடுந்தானே''.

(க. து.) ஒரு படி பனங்கள்ளில் ஒரு சேர் கிருஷ்ணப் பிரகத்தை 5 நாள் ஊறப்போட்டு எடுத்துக் கன்னானுலையில் நன்றாய்ப் பழுக்கக் காய்ச்சிப் புளித்த தயிரில் மூன்று நாள் ஊறப்போட்டு கழுவி எடுத்து கம்பளத்திலாவது கோணியிலாவது முடிச்சுக் கட்டடித் தயிர் தெளிவு விட்டுப் பிசைந்து பிசைந்து, அழுத்தித் தேய்க்க வழுவழுப்பாக உள்முடிந்த அப்ரகம் வெளிப்படும். இதனை சேதப்படாமல் குடவான சட்டியில் போட்டுத் தயிரின் தெளிவு நீர் விட்டுக்கலக்கி ஒரு நாள் முழுவதும் அசையாமல் வைத்திருக்க, அப்பிரகத் தூளெல்லாம் கீழிறங்கி நீர் தெளிந்து நிற்கும். இந்த நீரை அசையாமல் சாய்த்து விட்டு ரவியில் வைக்க வெண்ணெய் போலிருக்கும். இதனையே ''அப்பிரக நவனீதம்'' என்பர். இதனை வெங்காயச் சாறு விட்டு மூன்று சாமம் நன்றாயரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி, ரவியில் உலர்த்தி அகலில் பரப்பி மேலகல் மூடி மண்சீலை செய்து காய்ந்த பின் கெஜபுடமிடவும். மீண்டும் இதனையே குமரிச்சாறு, ஆலம் விழுதுச்சாறு பழச்சாறு, பொற்றிலைக்கையான் சாறு இவை ஒவ்வொன்றிலும் மூன்று சாமம் அரைத்து ஒவ்வொரு புடம் முன்போல் போட்டெடுக்கத் தளுக்கில்லாமல் சிந்தூரமாகும். ஒருக்கால் அரைப்பின் குறைவாலாவது புடத்தின் மென்மையாலாவது தளுக்கிருந்தால் பொற்றிலைக்கையான் சாறு அல்லது திரிபலைக்கியாழம் ஏதேனுமொன்றில் மீண்டும் அரைத்து இரண்டு புடம் போட்டெடுக்க பூரணமான சிந்தூரமாகும்.

அளவு.—குன்றி எடை காலை, மாலை தக்க அனுப்பானங்களில் கொடுக்க 10-15 நாளில் அதிநீர், தாகம் பலவீனம் முதலிய குணங்களையுடைய மதுமேகம் குணமாகும்.

பத்தியம்.—சம்போகம், லாகிரி, மதுரமுள்ள பொருள்கள் இவைகளை நீக்கி மற்றவற்றைப் புசிக்கலாம். இச்சிந்தூரத்தை மேகசிந்தாமணிச் சிந்தூரத்தில் சேர்த்துச் செய்தல் மிகுந்த நன்மை பயக்கும்.

மதுமேகலேகியம்; or எள்ளுப்பிண்ணாக்கு லேகியம்:—(சிகிச்சாரத்ன தீபம்) எள்ளுப்பிண்ணாக்கு பலம் 1/2, ஆவிரம் பட்டை பலம் 1/2, பருத்தி விதைப் பருப்பு 4 தோலா, வால் மிளகு 2 தோலா, இலவங்கப் பட்டை 2 தோலா, மாசிக்காய் 1 தோலா, சிறுநாகப்பூ 1 தோலா, பறங்கிப்பட்டை 2 தோலா, பசுவின் பால் சேர் 1/2, நல்லெண்ணெய் 6 தோலா, பழைய வெல்லம் 7 1/2 பலம்.

செய்பாகம்:—மேற்கூறப்பட்ட சரக்குகளைச் சூரணித்துப் போதிய அளவு பால் விட்டரைத்து வைத்துக் கொள்க. பால் மிகுந்திருப்பின் அத்துடன் சிறிது நீர் கலந்து வெல்லத்தை அதில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிப் பாகுபதத்தில்

முன் அரைத்து வைத்திருக்கும் மருந்தைப் போட்டு நன்றாய்க் கிளறி இலேகிய பதத்தில் நல்லெண்ணெய் விட்டு பிசைந்து பத்திரப்படுத்துக.

பிரயோகம்:—வேளைக்கு 1/2 தோலா வீதம் காலை மாலை சாப்பிட்டுவர வெகு மூத்திரம், மதுமேகம், இந்திரிய நஷ்டம் இப்பிணிகள் நீங்கும்.

N.B.:—இந்த லேகியத்துடன் அடியிற்கண்ட இலிங்க மாத்திரையைக் கூட்டிச் சாப்பிட்டுவர மேற் கூறிய பிணிகள் விரைவில் குணமாகும்.

8. மதுமேக நோய்க்கு இலிங்க மாத்திரை:—(சிகிச்சாரத்ன தீபம்) இலிங்கம், நாபி, இவை வகைக்கு பலம் ஒன்று, சிவனார் வேம்பு வேர் பலம் 5, நல்லெண்ணெய் பலம் 5.

செய்பாகம்:—நாபியை மட்டும் சுத்த நீர் விட்டு நெகிழ அரைத்து இலிங்கத்திற்குக் கவசமிட்டு பிறகு சிவனார் வேம்பு வேரைச் சுத்த நீர் விட்டு முன்போலவே அரைத்து மற்றொரு முறை கவசமிட்டு இரண்டு மணி நேரம் சுடு வெயிலிலுலர்த்தி அதன் மேல் பட்டுத் துணியால் சுற்றி வைத்துக்கொள்க. ஒரு இரும்புக் கரண்டியில் நல்லெண்ணெய் விட்டு நெருப்பின் மேல் வைத்துச் சூடேறிய பின் முன் சித்தப்படுத்திய லிங்க உருண்டையை அதில் போட்டு எண்ணெய் எல்லாம் சுண்டச் சுண்டப் புரட்டி கொண்டு வருக. மேல் கவசம் கருகின பதத்தில் உள்ளிருக்கும் இலிங்கத்தை வெளிப்படுத்திக் கல்வத்திலிட்டு அரிசி வெந்த கொதிநீர் விட்டு ஒரு சாமம் அரைத்து மெழுகு பதம் வரும்போது மிளகுப்பிரமானம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொள்க.

பிரயோகம்:—ஆவாரம் இலைச்சாறு அல்லது ஆவாரங் கொழுந்து அரைத்த விழுதுடன் சமன் பசு வெண்ணெய் கூட்டியேனும் சுமார் புங்கங்காய் பிரமானத்தில் வேளைக் கொரு மாத்திரை விகிதம் தினம் காலை, மாலை, 7—10 நாள்கள் சாப்பீட்டுவர வெகு மூத்திரம் மதுமேகம் முதலிய பிணிகள்போம்.

N.B.:—இம்மாத்திரையை மதுமேக லேகியத்துடன் உண்ண மிக்க நன்மை பயக்கும்.

9. வைத்திய வித்வன்மணி சி. கண்ணுச்சாமி பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கம என்னும நூலிலிருந்து சேகரிக்கலான மதுமேக நிவாரணிகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன:—

1. அத்திக்காய்—பிரமேகம் போம்.

2. அபினி—மதுமேகத்திற்கு இதை அயச்செந்தூரத்துடன் கூட்டிக்கொடுக்க விரைவில் குணப்படும்.

3. அறுகம்புல்.—மதுமேகத்தில் உண்டான அதி தீவிரமான தாகம் அடங்கும்.

4. ஆவாரம் பூ, மதுமூத்திரம், இரத்த மூத்திரம், பெரும்பாடு, உட்காங்கை, தாகம் இவை போம்.

5. ஆவாரை செடியானது—சர்வபிரமேக மூத்திர ரோகங்களையும் ஆண்குறி எரிவந்தத்தையும் குணமாக்கும்.

6. ஆவாரம் பட்டை குடி நீர்:—அரை பலம் ஆவாரம் பட்டையை நன்றாய் இடித்து ஒரு மட் கலயத்தில் போட்டு 1/2 படி சலம் விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து வீசம்படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி தினம் இரு வேளை 1 1/2 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர மதுமேகம் இரத்த மூத்திரம் பெரும்பாடு, தாகம் இவைகள் நீங்கும்.

7. ஆவாரம் பிசின்:—மதுமேகம், தாகம், உட்காங்கை, விந்து நட்டம் இவை நீங்கும். ஆவாரம் பிசின் கிடைக்குமானால் சேகரித்து வந்து 2-3 குன்றி எடை தினம் இரு வேளை சாப்பிட்டுவர மேற்கண்ட நோய்கள் தீரும்.

8. இடி ஆவாரை லேகியம்.—நன்றாய்க் கழுவித் தேய்த்துக் கருப்புப் பொட்டு போகப் புடைத்தெடுத்த எள்ளு பலம் 10, ஆவாரம் வேர்ப்பட்டை சூரணம், வறுத்த கடலை மாவு இவை வகைக்கு பலம் 5, இவற்றுடன் 1/4 வீசை வெள்ளை சீனியும் 1/8 படி அல்லது போதிய அளவு தேனையும் விட்டு நன்றாய் இடித்து ஜாடியில் பத்திரப் படுத்துக. வேளைக்கு நெல்லிக்காயளவு லேகியம் காலை, மாலை கொடுத்துவர தாகம், அழலை, நீரழிவு முதலிய பல பிணிகள் போம்.

9. கடலழிஞ்சில்;—10 பலம் கடலழிஞ்சில் பட்டையை நன்றாய் இடித்து ஒரு வாய் அகண்ட மட்கலயத்தில் போட்டு 2 படி நீர் விட்டு 1/4 படியாக வற்றக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி மீண்டும் பாண்டத்தில் விட்டு குழம்பு பதமாகக் காய்ச்சி பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைத்து உலர்த்தி இடித்து சூரணமாகச் செய்து வைத்துக் கொள்வதுண்டு. இதுவே கடலஞ்ழிசில் பட்டை சத்தாகும். இதனை 5-10 குன்றி எடை தினம் இரண்டு வேளை சர்க்கரையுடன் கலந்தாவது அல்லது இனிப்புள்ள சர்பத்துகளில் கலந்தாவது கொடுக்க நீரழிவு, மதுமகம் இவை குணமாகும்.

10. கடலழிஞ்சில் பட்டை லேகியம்:—1 வீசை கடலழிஞ்சில் பட்டையை பஞ்சு போல் இடித்து ஒரு பாண்டத்திலிட்டு (8) எட்டு படி நீர் விட்டு 1 படியாக வற்றக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும். 1 படி பருத்திக் கொட்டையை ஒரு நாள் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் உரலில் இடித்து அப்பால் ஆட்டுக்கல் உரலில் போட்டு நீர் தெளித்து குழவியைக் கொண்டு ஆட்டி வழித் தெடுத்துச் சீலையில் வைத்துப் பிழிந்து பால் வாங்கவும், மீண்டும் திப்பியை கல்லுரலில் ஆட்டி முன் போல் பால் வாங்கவும். இப்படி 1 படி பால் சேகரித்துக் கொள்க. அப்பால் உலர்ந்த வன்னி இலை, அத்திப்பிஞ்சு, ஆவாரம் பட்டை, கசகசா, சுக்கு வேப்பம்பட்டை, கிராம்பு, ஓமம், கொத்தமல்லி விதை ஜாதிக்காய், சிறு நாகப்பூ, ஏலம், சடாமாஞ்சில், திரிபலை, மரமஞ்சள் வகைக்கு பலம் ஒன்றாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்க. பிறகு கடலழிஞ்சிப்பட்டையை கியாழத்தையும் பருத்திக்கொட்டைப் பாலையும் ஒரு பாத்திரத்திலிட்டு 2 வீசை வெள்ளைச் சர்க்கரையைப் போட்டுக் கரைத்து அடுப்பிலேற்றி, பாகுபதம் வரும் சமயம் முன் சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு கிளறி கீழ் இறக்கி போதிய அளவு நெய் தேன் விட்டு கிளறிவைத்துக் கொள்க. இந்த லேகியத்தை அந்தி சந்தி கழற்ச்சிக்காய் அளவு கொடுத்துவர மதுமேகம், நீரழிவு முதலிய நோய்கள் குணமாகும்.

11. கடற்றேங்காய்:—இதனை சிதைத்து முறைப்படி கியாழமிட்டு வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை கொடுத்துவர நீரிலுள்ள தித்திப்பை நீக்குவதுடன் வெகுமூத்திரத்தையும் குணப்படுத்தும்.

12. கருங்காலி மரத்தின் வேர்:—இதனை முறைப்படி குடிநீரிட்டு வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் இரு வேளை சாப்பிட்டுவர மதுமேகத்தையும், குடற் கிருமியையும் இரத்தத்துடன் கூடிய பேதி, ஆசனக்கடுப்பு இவைகளைப் போக்கும். அன்றியும் நீடித்து சாப்பிட்டுவர குட்டம் என்னும் குறை நோயும் போம்.

13. கருவேலம் பிசின்:—இதனை லேகியங்களில் சேர்க்க தாது புஷ்டி உண்டாகும். இன்னும் பேதி, மதுமேகம், வறட்சி இருமல் இவை குணமாகும்.

14. கர்ச்சூர்க்காய்:—இந்தக் காயை தினம் இரு வேளை 2-3 தின்றபின் பசுவின் பாலை அருந்திவர கபத்தை அறுக்கும். பசியை உண்டாக்கும். மது நீரைப் போக்கும். தாது விருத்தியை உண்டாக்கும்.

15. கற்பாசி:—இதனை சில காலத்திற்கு முன் மதுமேக நோய்க்கு உபயோகப் படுத்தியிருக்கின்றனர். இப்போது தள்ளப்பட்டு இருக்கிறது.

16. கிரந்திதகரம்:—இதன் வேர்ப்பட்டையை கியாழமிட்டாவது அல்லது இதன் விதையை சூரணஞ் செய்து தக்க அளவில் தேனிலாவது நெய்யிலாவது கொடுக்க, மதுமேகம் போம்.

17. கீழ்வாய்நெல்லி:—இதனை அரைத்து கற்கமாய் ஆவது அல்லது இதர சரக்குகளுடன் கூட்டி கியாழமாக வாவது உட்கொள்ள மதுபிரமேக மூத்திரம், நாட்பட்ட மேகப்புண், காமாலை முதலியன குணமாகும்.

18. கேழ்வரகு:—இதனை மாவாக அரைத்தெடுத்து கூழாகவாவது, களியாகவாவது, பால் சேர்ந்த கஞ்சியாகவும் ரொட்டியாகவும் தோசையாகவும் பாகப்படுத்தி உண்பதுண்டு. இத்தகைய ஆகாரம் மதுமேகத்தையுடையவர்களுக்கு அதிக நன்மை தரும்.

19. கோதுமை அரிசி:—இதன் மாவை ரொட்டியாகவும், அடையாகவும் சன்ன நொய்யை கஞ்சியாகவும், பெரும் நொய்யை பொங்கலாகவும், சாதமாகவும் உண்பதுண்டு. இத்தகைய உணவு மதுமேகத்தையுடையவர்களுக்கு சிறந்ததாகும்.

20. கோவைக் கிழங்கு:—இதை இடித்துச் சாறு எடுத்து 1—2 தேக்கரண்டியளவு காலை மாலை கொடுத்துவர மது மேகம் போம். இக்கிழங்கை மேல் தோல் போக்கி உலர்த்தி பொடித்து எங்களது dia—diet என்னும் மருந்தில் சேர்க்கப் படுகிறது. செங்கோவை இலைச்சாறு மது மேகத்தைப் போக்கும். கருங்கோவை மேகவிரணத்தை நீக்கும்.

21. சம்புநாவற்பழம்:—இது மது மேகத்தையுடையவர்களுக்கு உண்டாகும் தாகத்தையும், தேக அழலையையும் அதிக நீர் போவதையும் நீக்கும். இதன் அப்பட்டமான பழச்சாறுக்கு இரண்டு பங்கு சர்க்கரை கூட்டி தேன் பதமாக காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு பலம் வீதம் தண்ணீரில் விளாவிக் கொடுக்க, உட்சூடு தணியும்.

22. சரக்கொன்றைப்பூ:—இந்தப் புஷ்பத்தை— ½ தோலா எடை ஒரு மட்கலயத்தில் போட்டு 1/4 (கால்) படி நீர் விட்டு 1/8 படியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி கொடுக்க குடலில் ஏற்பட்ட நோய்களைப் போக்கும். நீடித்து சாப்பிட, மதுமேகம் போம். வயிற்றிலுள்ள கிருமிகளும் மடியும்.

23. சீந்திற் கிழங்கு அல்லது கொடி:—½ பலம் சீந்திற் கொடியாவது அல்லது கிழங்கையாவது பஞ்சுபோல் தட்டி ஒரு கலயத்தில் போட்டு ½ படி நீர் விட்டு 1/8 படியாக சுண்டக் காய்ச்சி வேளைக்கு 1—1½ அவுன்சு காலை, மாலை கொடுக்க மதுமேகம் போம்.

2. வேறு:—சீந்திற் கொடி 1/2 பலம், நெற் பொரி 1/2 பலம் இவைகளை ஒரு கலயத்தில் போட்டு 1/2 படி நீர் விட்டு வீசம் படியாக சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1—1½ oz வீதம் தினம் மூன்று வேளை கொடுக்க மேகநீர், அழலை, தாகம் இவை தீரும்.

24. சீந்திற் சருக்கரை:—இதனைத் தனியாக உபயோகப்படுத்துவதில்லை. கீழ்க்கண்ட அமிர்தாதி லேகியம் செய்து கொடுக்க பிரமேகம், நீரழிவு, மதுமேகம், அஸ்தி மேகம், தாகம், வறட்சி, மேக காங்கை முதலிய பிணிகள் போகும்.

சீந்தில் சத்து எடுக்கும் முறை மற்றொரு இடத்தில் கூறியுள்ளோம்.

அமிர்தாதி லேகியம் செய்முறை:— சீந்திற் சருக்கரை பூமி சருக்கரைக்கிழங்கு வகைக்கு பலம் 2½, பரங்கிச்சக்கை, பலம் 3, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், சிற்றரத்தை, சிறு நாகப்பூ, மகரப்பூ, கடலிராஞ்சிப்பட்டை, கிராம்பு கோஷ்டம், ஏலம், சிறுதேக்கு, அதிமதுரம், சந்தனத்தூள், சீரகம், சடாமாஞ்சி வகைக்கு பலம் ½, குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு பலம் ¼, ஆக இவற்றை கல்லுரலிலிட்டு கடப்பாறையால் நன்கு இடித்து சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு பெரிய பாண்டத்தில் ஆவாரம் விதை, ஆவாரம் வேர் வகைக்கு பலம் 5 வீதம் இடித்துப் போட்டு 10 படி செவ்விள நீர் இட்டு அடுப்பில் ஏற்றி சிறு தீயாய் எரித்து 1/8 பாகமாக வற்றக் காய்ச்சி கீழே இறக்கி வடிகட்டி அதில் ஒரு வீசை வெள்ளைச் சருக்கரை போட்டுக் கரைத்து மற்றொரு பாண்டத்திலிட்டு மீண்டும் அடுப்பேற்றி எரிக்கவும். நல்ல பாகுபதம் வரும் சமயம் முன் சூரணங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளறி கீழே இறக்கி ஆற விட்டு போதிய அளவு நெய்யும் தேனும் விட்டு பிசைந்து ஜாடியில் வைக்கவும். வேளைக்கு கொட்டைப் பாக்கு அளவு தினம் காலை, மாலை இருவேளை 1/2-1 மண்டலம் சாப்பிட்டுவர மேற்குறிப்பிட்ட நோய்கள் குணமாகும்.

25. நன்னாரி வேர்:—இதனைச் சூரணித்து தக்க அளவில் தேனில் கலந்துண்ண மதுநீர் மற்றும் அநேக நோய்கள் போம்.

26. நாவற் கொட்டை:—இதன் கொட்டையை கல்வத்திலிட்டு ஆடு தீண்டாப்பாளை சாறு விட்டு எட்டு ஜாமம் அரைத்து பட்டாணி அளவு மாத்திரை செய்து உலர்த்தி காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வர மதுமேகம் குணமாகும். நாங்கள் இந்த மாத்திரையை தயாரித்து உபயோகித்து வருகிறோம்.

2. இதன் பழத்திலிருந்து தனிச்சாறு எடுத்து இரு மடங்கு சருக்கரை சேர்த்து தேன் பதமாக காய்ச்சி வைத்துக் கொண்டு 1—1½ தோலா வீதம் காலை, மாலை சாப்பிட்டுவர வெகு மூத்திரம், பெரும்பாடு, உட்காங்கை இவைகள் குண மாகும்.

27. பாதிரிவேர்:—இதன் பட்டையை இதர சரக்கு களுடன் கூட்டி மதுமேக நோய்க்கு உபயோகப் படுத்துவது உண்டு.

28. பெருங்குமிழ மரம்:—இதன் வேரை அரைத்து சுண் டக்காயளவு பசும் பாலில் உட்கொள்ள மதுமேக எரிச்சல் போம்.

29. பொடுதலை:—இதனைத் துளிர் காம்பும் இலையு மாகப் பறித்து ஒரு பலம் எடைக்கு 1/4 படி நீர் விட்டு சிறு தீயாக எரித்து விசம்படியாக வற்றவைத்து வடித்து வேளைக்கு ஒரு அவுன்சு அளவாக காலை, மாலை கொடுத்துவர நீரில் இனிப்புள்ளவர்களுக்கு நீரைக் குறைத்து இனிப்பை மாற்றும்.

30. பொற்சீந்திற் கிழங்கு:—இதன் உபயோகம் சீந்திற் கொடியின் தலையங்கத்தின் கீழ் கூறப்பட்டதேயாகும். மது மேக நீரைப் போக்கும். கிழங்கும் கொடியும் உபயோகம் ஆகும்.

10. பிரமேக ஹரம் (சதசுலோகம்)

''கொண்டநல்லாவாரை கடலழிஞ்சிப்பட்டை
கோவைக் கிழங்கினுடனே
குழம்புமோரிரு மஞ்சள் பருத்தியின் வித்துடன்
குன்றியின் விரை சீந்திலுங்
கோஷ்ட மொடுபேயத்தி பட்டை சேங்கொட்டையும்
குக்குல் பொன்னாங் காணியுங்
கோரைக்கிழங்குடன் காந்தமண்டூரமுங்
குலவுதேற்றான் கொட்டையும்
மண்டுநாவற்பட்டை பாலை மருதம் பட்டை
வட்டத்திருப்பிவேரும்
வாசந்தரும் விளாம் பட்டை நிலையாவாரை
வன் சிறு பயற்று நீரும்
வாகை நிம்பப்பிசின் விடத்தேரியின் பிசின்
வன் கருங்காலி வெள்வேல்
வகையாம் விளாம் பிசின் கருவேலதன் பிசின்
வன் பலாசம் பிசின் துங்
கண்டதாமரை வித்து முசுட்டையின்யிலை வித்து
கருது நீர் முள்ளி மத்து

கரியவேப்பிலையுடன் மூங்கிலிலையல்லிவிரை
கடுஞ்சிறு நெருஞ்சி வித்துங்
கானப்பலாசதின் பட்டை தென்னம் பூவுங்
கடிய பூவரசு மலருங்
கருதுகற்பூரச் சலாசத்துமப் பிரகங்
கடுநாக செந்தூரமும்
அண்டர் கொள்தேனதுந் தேங்காயினெண்ணெயு
மரிய நல்லெண்ணெயதுவும்
அரிதான சீனியுமுருங்கையின் பட்டையு
